# VICTORIA

# TAMIL READERS.

## Third Form


BY

S. V. RAMASWAMI AIYANGAR,

*Late Asst. St. Peter's College,*

*Tanjore.*



THE REGISTRAR OF

7 - MAR 1899

MADRAS.


FIRST EDITION.


MADRAS:

PRINTED AT THE CITY PRESS, POPHAM'S BROADWAY,

AND PUBLISHED BY THE

S. I. E. T. CO.,

KUMBAKONUM.

1899.

# CONTENTS.

## PROSE.


| | பக்கம். |
|---|---|
| 1. தாய் செய் நன்றி ... ... ... ... ... | 1 |
| 2. ஊவகை விலங்குகள் ... ... ... ... ... | 4 |
| 3. கடவுள் மகிமை ... ... ... ... ... | 7 |
| 4. செல்வப்பொருளோம்பல் ... ... ... ... | 10 |
| 5. முன்சாக்கிரதை ... ... ... ... ... | 14 |
| 6. எவையும் நன்மைக்கே அமையும் என்னும் துணிவு ... | 17 |
| 7. வருமையும் செல்வமும் ஓரிடத்தில் நிலையா ... ... | 20 |
| 8. ஸர் ஐஸக் நியூட்டன் ... ... ... ... | 25 |
| 9. கற்றாய்ந்தொழுகல் ... ... ... ... ... | 28 |
| 10. நற்போதவிளக்கம் ... ... ... ... ... | 31 |
| 11. தீமைமறத்தல் பெரியோர் தன்மை ... ... ... | 36 |
| 12. முயற்சி உடையோர் இகழ்ச்சியடையார் ... ... | 40 |
| 13. மனோதைரியம் ... ... ... ... ... | 44 |


## POETRY.


| | |
|---|---|
| திரிகடுகம் ... ... ... ... ... ... | 49 |
| நான்மணிக்கடிகை ... ... ... ... ... | 53 |
| சிறுபஞ்சமூலம் ... ... ... ... ... | 58 |
| தாயுமானவர் பாடல்... ... ... ... ... | 62 |

# விக்ட்டோரியா தமிழ்ப் புத்தகம்.

## மூன்றாம் பாரம்.

### 1. தாய் செய் நன்றி.

"ஈன்றாளின் என்ன கடவுளுமில்."

1. நம்மைக் கருப்பத்திற் சுமந்து வருந்திப்பெற்று வளர்த்தவள் யார்? நமது அருமைத்தாய். நாம் குழந்தையாயிருந்தபொழுது நம்மீது ஈ மொய்க்காமலும், எறும்பு கடியாமலும், கொடுங்காற்று வீசாமலும், பனி வெய்யில்கள் படாமலும், பறவைகள் சமீபத்திற் பறவாமலும் காத்து, நாம் அழுதபொழுது நம்மை மார்பிலும் தோளிலும் வயிற்றிலும் அணைத்து, உச்சந்தலைமுதல் உள்ளங்கால்மட்டும் தடவி இன்னோசைப்பாட்டுப்பாடி நம்மைக் கையிலெடுத்து, ஊசலாட்டி நமக்குச் சிரிப்பும் களிப்பும் வரச்செய்தவள் யார்? நம்மைப் பெற்ற நற்றாய். நமக்குப் பாலூட்டி, நீராட்டி, நெற்றிக்குப் பொட்டிட்டு, மைதீட்டிப் பட்டாடை யுடுத்திப் பொற்பணி பூட்டினவள் யார்? நம்மைப் பயந்த அருமை யன்னை. பின்னரும் உச்சிமோந்து, கண்ணோடு கண்ணும் முகத்தோடு முகமும் வாயோடு வாயும் வைத்துக் கொஞ்சி முத்தாட்டி, நம்மைத் தொட்டிலில் விட்டுத் தாலாட்டி, 'சீரரப் பசுங்கிளியே, தெவிட்டாத செந்தேனே, பேரார் குலக் கொழுந்தே, பெருமானே, இருகண்மணியே, இலஞ்சியமே, என்னுயிரே, தெள்ளமுத கும்பமே, தித்திக்குஞ் செங்கரும்பே, பிள்ளைகலி தீர்த்த பெரியமத குஞ்சரமே'

மாணிக்கக் கால்நாட்டி வச்சிர வடம்பூட்டி
ஆணிப்பொற் றொட்டிலிட்டேன் அருமருந்தே கண்வளராய்
அத்தை மடிமேலும் அம்மான்மார் தோள்மேலும்
வைத்து முத்தாடும் மரகதமே கண்வளராய்.'

என்று மதுரமொழிப் பாட்டிசைத்துச் சீராட்டி நம்மைத் துயிலச் செய்தவள் யார்? நம்முயிர்க்கு உயிரான நன்மாதா. நாம் பிணியால் வருந்தினபொழுது, நோய் வளராமல், 'பாலுண்குழவி பசுங்குடல் பொறாதென நோயுண்மருந்து' தாயாகிய தானே உண்டும் பத்தியங் காத்தும், கண்ணை இமைகாக்குமாறு அபாயம் அணுகாமல் நம்மைக் காத்தவள் யார்? நம்மை ஈன்ற அருமருந்தன்ன அன்னை.

2. சிறு பருவத்தில் நாம் பெருந்தீங்கு இழைக்கினும், மன்னித்து நற்புத்தி போதித்து, நம்மை நல்வழிப்படுத்தினவள் நமது தாயன்றோ! நமக்கு இடுக்கண் உற்ற காலத்தில் தனக்கு நேர்ந்ததினும் பதின்மடங்கு அதிகமாகப் பாவித்து, நமது காலில் முள்தைத்தாலும், தன் கண்ணிலே தைத்ததுபோற் கருதிப் பாராட்டிப் பரிதபித்துப் பாதுகாத்தவள் நம்மைப் பெற்ற நற்றாயன்றோ? துர்ச்சனரோ டிணங்கித் துர்ச்செய்கை செய்யாமல் தடுத்துச் சற்சனரோடு கூடிக் குலாவி நற்செய்கை புரிய நமக்கு நல்லறிவு புகட்டினவள் நமது நன்மாதா வன்றோ? நம்மிடத்து ஒரு நன்மையும் எதிர்பாராமல் நமது சுகமொன்றையே நாடி, அதுவே தனக்குப் பெரும் பாக்கியமெனக் கருதி, நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக அருமையிலும் அருமையாக நம்மை வளர்த்தவள் நமது அருமை யன்னையன்றோ? ஆமை தானிட்ட முட்டையை இடைவிடாது நினைப்பதுபோல் நம்மையே சிந்தையுட்கொண்டும், மீன் தன் சினையை நோ

க்குமாறு நம்மைக் கண்ணுற்றும், பறவை தான் பொரித்த குஞ்சைச் சிறகினால் அணைக்கும் வண்ணம் கரத்தால் நம்மைத் தழுவியும், பசு தானீன்ற கன்றிடத்து இரங்குவதுபோல் நம்பால் இரங்கியும் நம்மைக் காத்தவள் நம்மைப் பயந்த அருமை யன்னை யன்றோ?

3. நம்முடைய சுகம் நமது தாயினது சுகம். நம்முடைய துக்கம் அவளது துக்கம். நாம் நோயின்றிச் சுகமாயிருந்த பொழுது நோன்புநோற்றுக் கடவுளை வழிபட்டுப் போற்றினவள் நமது தாயே. நாம் சுகங்குன்றிப் பிணியணுகி வருந்தினகாலை நமது வாந்திமுதலிய அசுத்தங்களைப் பொறுத்து, நமக்குச் சுகம் அளிக்கும் பொருட்டுத் தன்சுகத்தைக் குறைத்துக் கொண்டவள் நமது அன்னையே. நமது கண்ணோக்கத்தின் குறிப்பறிந்து நமது மனதிற்கினிய பொருள் பெறுதற்கு அரிதெனினும் நாடிமுயன்று நமக்குத் தேடி ஈந்தவள் நமது மாதாவே.

4. இத்தனை அன்புடையவளாய் நம்மை மடிமேல் வைத்து மார்போடணைத்துப் பால்கொடுத்து வளர்த்த அன்னையை நாம் மறப்பது நியாயமாகுமா? நன்றி மறப்பது நன்றன்று. 'தாயோ டறுசுவை போம்' என்று உலகம் கூறுவதே அன்னையின் அருமைபெருமையை நன்கு விளக்கும். மாதாவை ஒருகாலும் மறக்கலாகாது. தளர்ந்த காலத்தில் சஞ்சலமுற விடாமல் பரிவுடன் அன்னையை ஆதரிப்பது நமது கடமை. நம்மை ஈன்றும் புரிந்திருக்கும் நன்மைக்கு நாம் எத்தனைகாலம் தொண்டுசெய்தாலும் அத்தொண்டு நிகராகாது. நமது கடனும் தீராது. 'மாதா பிதா குரு தெய்வம்' எனத் தாயையே முதலாகக் கொண்டு சொல்லும் வழக்கே தாயின் பெருமையை நன்கு புலப்படுத்துகின்றது. நாம் தாயைக் கடவுளருளெனக் கருதி முகம் சுளியாமலும் உள்ளதை யொளி

யாமலும், அவள் திருவுளத்திற்கு மாறுளமின்றி, அவள் மாற்றத்திற்கு மறுமாற்றமின்றி, அவள் வாக்கைக் கடவுள் திருவாக்கெனக்கொண்டு, அவள் மனங்குளிர நாம் ஒழுக வேண்டும். "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்னும் முதுமொழியின் கருத்தை இனிதுணரவேண்டும். தன்தாயி றந்தபொழுது பற்றற்ற பட்டணத்தடிகளும் இடுகாடெய்தி தன் தாய்சரீரத்தைக் கட்டையில் வைத்து 'யானுமி ட்டதீ மூள்க மூள்கவெ' என்று குடியிருந்த வீட்டிற்சுக் கொள்ளிவைத்துக் குடமுடைத்துப் பால் தெளித்துப் புலம்பினரெனின், பற்றறாத மற்றையர் தாயர் மாட்டுச் செய்யவேண்டுவது தவிர் பாலதாமோ ? நமது பெற் ரோர்க்கு நாம் செய்யும் உபசாரமே நம்மக்களால் நாம் பெறுவோம்.

பசியைத் தணியாத உணவும்,
தாகத்தைத் தீராத நீரும்,
கோபத்தை யடக்காத மனிதனும்,
குருமொழி கேளாத சீடனும்,
தாய்க்கு உதவாத பிள்ளைபோலாம்.

## 2. மூவகை விலங்குகள்.

1. குளமீகாளார்த்தத்தின் தென்மேற்குத் திசையில் பூமத்திய ரேகைக்கு இருபுறமும் அமைந்து ஆப்பிரிக்கா என்னும் நாமம்பூண்ட கண்டம் ஒன்று உளது. ஆப் பிரிக்கா என்னும் மொழி கறுப்பு எனப் பொருள் படும். வெப்ப மிகுதியால் அக்கண்டம் மானிடர் வசித்தற்கு ஏலாததாய் இருப்பதுபற்றி அதன் உள் நாட்டு வளப்ப முறையை அறிவது எளிதன்று. அவ்வாறிருப்பினும்

மேற்றிசைக் கண்டத்தவர் தங்கள் தேகசுகத்தைப் பாராட்டாமலும் பொருட் செலவை மதியாமலும் அக்கண்டத்துட் புகுந்து நிலவளம் நீர்வளம் விலங்கின் இயற்கை முதலியனவற்றை ஆய்ந்து பரிசிலனை செய்து வருகின்றனர். அவற்றுள் மூவகை நாற்கால் பிராணிகளைப்பற்றி ஈங்கு எடுத்துரைப்பாம்.

## 1. கொரில்லா.

2. இவ்விலங்கு குரங்கினத்தில் மிகப்பெரியவைகளுள் ஒன்றாம். ஆப்பிரிக்காவின் மேற்குப்பாகத்திலுள்ள அடர்ந்தவனமே அதன் சுதேசம். இப்புவியின் வேறு எப்பகுதியிலும் இவ்வகை வானரம் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. பார்வைக்குப் பயங்கரமான பற்கள் பொருந்தின அழுத்த தாடைகள் அமைந்து எவ்வகை விலங்கையும் இலகுவில் அடக்கி மாய்க்கத்தக்க வலிமையுற்றிருக்கினும் கொரில்லா சாகபக்ஷணியேயன்றி மாமிசபக்ஷணியன்று. அதன் கரங்கள் அடர்ந்து வளர்ந்த உரோமம் பொருந்தி மிக அழுத்தமுள்ளவை. மழைபொழியும்போது கொரில்லா புகலிடந் தேடாது கைகட்டிக் குந்திக் கொண்டிருக்கும். அதன் மீது பெய்யும் மழைத்துளி கூரைபோல் அமைந்துள்ள உரோமத்தின் மேல் விழுந்து முழங்கை வழியாய்க் கீழே விழும். ஆண்விலங்கு இத்ர மிருகத்துக்கும் மனிதர்க்கும் அஞ்சாது.

## 2. கழுதைப்புலி.

3. இவ்விலங்கு உடலுருவத்தில் மாதங்கத்துக்கு நிகரெனினும் அதன் கால்கள் மிகக் குறுகியிருத்தலால் அத்தியின் கம்பீரமான தோற்றம் அதற்கு வாய்க்கவில்லை. கழுதைப்புலி பருத்த தலையும் அகன்ற வாயும் உக்கிரதந்தமும் சிறுத்த விழியும் குறுகிய செவியும்

அழுத்த சரம்மும் உள்ளது. நதிப்பாங்கரின் நாணற்காடே அது உகக்கும் வாசஸ்தானம். ஆற்றில் உலாவி சேற்றில் புரளுவதே அதற்கு இயற்கை. அது நீரில் சஞ்சரிக்கும்போது பலபெயர் கூடித் தள்ளும் படகையும் கொடியில் கவிழ்க்கத்தக்க வலிமையுள்ளது. கோர உருவத்ததெனினும் அரணிய வாசிகளாகிய விலங்குகளுக்கு அது எவ்வகைத் துன்பும் உறுத்துவதில்லை. சாந்தமுள்ளதேனும் சீற்றம்மூட்டப்பட்டாலோ எதிர்க்கும் பிராணியைச் சிதைத்துக் கொல்லும். ஆப்பிரிக்காக் கண்டத்தவர்க்கு அதன் மாமிசம் சிறந்த உணவாகும். அதன் பற்கள் விலைபெற்ற தந்தமாகும். அதன் தோல் நானுவிதக் கருவிகளாக வமையும்.

## 3. காண்டாமிருகம்.

காண்டாமிருகம் பருமனில் வேழத்தை ஒக்குமெனினும், குறுகிய கால்களுடையது. பார்வைக்குப் பருத்த முட்பன்றிபோற் றோன்றும். பெருஞ்செவியும் குறுகிய விழியும் வாய்ந்தது. மேற்றோல் கனதியுள்ளதுபற்றி மடிப்பு விழுந்திருக்கும். மேலும் விலங்கரசனின் பஞ்சா ஈட்டி கத்தி முதலியன ஊடுருவிச்செல்ல இயலாத அழுத்தமுள்ளது. தன் கொம்பால் அடர்ந்த புதர்களையும் சிறு மரங்களையும் பெயர்த்துத் தள்ளுவதுமன்றி சத்துருக்களோடு எதிர்த்துப் போர்புரியும். இவ்விலங்கு புலியோடு கைகலக்கநேர்ந்தால், முன்னையதே வெற்றிபெறும். தன் கொம்பின் ஒரு வீச்சால் வேங்கையைக் கொத்தி உயர எறிந்து அது கீழே விழும்போது அதை மிதித்துக்கொல்லும். சதுப்பு நிலமும் நிழலுள்ள வனமும் அதன் இருப்பிடம். அது கிழங்குகளையும் முட்செடிகளையும் சாகங்களையும் தின்றுசேற்றில் புரண்டு சுகிக்கும். அது தீங்கி

ழையா விலங்கெனப் பெயர் பெற்றிருப்பினும் அதை எதிர்த்து நிற்றல் உயிர்ச்சேதம். அது தன் சுதேசத்தில் தன்னந்தனியே உலாவித் திரியும். ஆப்பிரிக்காக் கண்டத்துக் கண்டகம் இரு கொம்புடையது. தென் பாகத்திலுள்ள இவ்வினம் மிகச்சிறிது. வனசரர் மிருகேந்திரனினும் கொடியதென அதைச் சிந்தித்து அதைக் கண்டால் அச்சமுறுவர்.

## 3. கடவுள் மகிமை.

1. நாம் நடமாடுகிற பூமியையும், ஆகாய விரிவில் தோன்றும் சந்திரன் சூரியன் நட்சத்திரங்களையும், இவை போன்ற அநேக அண்டங்களையும், இவற்றில் உள்ள பொருள்களையும் படைத்துக் காப்பவர் கடவுள். அப்படிப் பட்ட சிருஷ்டி கர்த்தர் ஒருவர் இல்லையென்று யாராகிலும் சொல்லக் கூடுமா? ஒரு மாளிகை தானாய் அமைந்த தென்றால் நம்புவார்களா? காற்றில்லாமல் தூசு பறக்குமா? சூத்திரக்காரனில்லாமல் பதுமை யாடுமா? வித்தில்லாமல் விளைவு உண்டாகுமா? சாரதியில்லாமல் தேர் நடக்குமா? மீகாமனில்லாமல் மரக்கலம் ஓடுமா? காரணம் இல்லாமல் காரியம் ஏது? எப்பொருளுக்கும் காரணமாயிருப்பவர் கடவுளே.

2. கடவுளை நாம் காணவில்லையே, அப்படி ஒருவர் உண்டென்று எப்படி நம்புகிறது என்று சிலர் கேட்கலாம். மரத்தில் இலை அசைவதைக்கொண்டு, காற்று என்னும் ஒரு பொருள் இருக்கிறது என்று நாம் அறிவதுபோல, படைப்புப் பொருள்களைக் கொண்டு அவற்றைப் படைத்தவர் ஒருவர் இருக்கவேண்டுமென்று அறிந்து கொள்ளலாம்.

3. கடவுள் எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் வியாபித்திருக்கிறார். அவர் இல்லாத இடம் கிடையாது. தனக்கு உருவமில்லாவிடினும் எல்லாவற்றிலும் விளங்குகிறார். நாம் எப்பொருளைப் பார்த்தாலும், எவ்விடத்தில் சென்றாலும், பாலில் சுவைபோலவும், நீருள் குளிர்ச்சி போலவும், தீயில் சூடு போலவும், பூவில் மணம் போலவும், மணியில் ஒளிபோலவும், அவர் மகிமை புலப்படுகின்றது. அவர் இன்றி அணுவும் அசையாது. கடவுளின் மகிமையைச் சொல்லி முடியுமா? எண்ணித் தொலையாது, ஏட்டிலும் அடங்காது.

4. கடவுளுக்குப் பிறப்புமில்லை இறப்புமில்லை. ஆதியுமில்லை அந்தமுமில்லை. இன்பமுமில்லை துன்பமுமில்லை. ஒப்புமில்லை உயர்வுமில்லை. அவர் அரசன்; நாம் குடிகள். அவர் ஆண்டவர்; நாம் அடிமைகள். அவர் பெற்றோர்; நாம் பிள்ளைகள். அவர் குரு; நாம் சிஷர்கள். தன்னை அண்டினபேரை ஆதரிக்க வல்லவர். நன்மை தீமைகளுக்குத் தக்கவாறு பயன் அளிப்பவர்.

5. நாம் உண்பது கடவுளுடைய உணவு. குடிப்பது அவருடைய தண்ணீர். உடுப்பது அவருடைய ஆடை. வசிப்பது அவருடைய வீடு. சுவாசிப்பது அவருடை மூச்சு. நடமாடுவது அவருடைய பூமி. நாம் அநுபவிப்பது அவருடைய சுகம். நமது தேகம் அவருடைய கொடை. நம்முடைய ஆத்துமா அவருடைய பிரசாதம். அவர் நம்மை அசைக்காமல் நாம் அசையக்கூடுமா? அவர் நம்மை நடப்பியாமல் நாம் நடக்கக்கூடுமா? எங்கேபார்த்தாலும் அவரது உபகாரமேயன்றி வேறு உண்டோ? ஆகாயம் நம்மைச் சூழ்ந்திருப்பது போல், அவர் நமக்குச் செய்யும் நன்மை நம்மைச் சூழ்ந்திருக்கின்றது.

6. இத்தன்மைய கடவுளின் தயையை நாம் தேடுவது அவசியமன்றோ? நாம் செய்யும் சிற்சில செயல்கள் அவருக்கு விருப்பத்தைத் தரும்; வேறு சில வெறுப்பை விளைவிக்கும். நாம் பெற்றோரைக் காப்பாற்றுதலும் பெரியோரைப் பூசித்தலும் அவருக்கு விருப்பம்; நாம் தாய்தந்தையரை நிந்தித்தலும் பெரியோரை இகழ்தலும் அவருக்கு வெறுப்பு. நாம் நன்னெறியில் நடத்தலும் மெய்யுரைத்தலும் அவருக்கு மகிழ்ச்சி. தீயவழியில் செல்லுதலும் பொய்பேசுதலும் அவருக்குக் கோபம். நாம் எக்காரியத்தையும் உள்ளும் புறம்பும் ஒத்துச் செய்தல் அவருக்குக் களிப்பு; நாம் மனதில் ஒன்று வாக்கில் ஒன்றாயிருத்தல் அவருக்கு வருத்தம். நாம் கோபத்தினால் சீறுதலும் பொறாமையினால் அபகரித்தலும் அவர் விரும்பாத செய்கைகள். நாம் நன்றி குன்றுவதும், சோம்பித் திரிவதும், சூதாடுவதும், கள்ளுண்பதும் அவர் வெறுக்கும் செயல்களாம். நாம் உயிர்ப்பிராணிகளை வதைப்பதும் பயனில்லாச் சொற்களை வசனிப்பதும் அவர் உகக்கும் கருமங்கள் ஆகா. ஜீவநேசமும் நன்மொழி யுரைத்தலும் அவர் விரும்பும் செய்கைகள்.

7. நாம் வழிபடக் கடவுளைப் போற்றி நன்னெறியில் நிற்போமானால், நமக்கு யாதொரு குறையும் வாராது. எத்தன்மைய விபத்து நேர்ந்தாலும் சூரியனைக் கண்ட பனி போல் விலகும். உலகத்தில் தெய்வ அன்புள்ளோர் மிகுந்தால் நாடு செழிக்கும்; காடு தழைக்கும்; நன்மழை பொழியும்; எப்பொருளும் கடவுளின் மகிமையை மொழியும்; நன்மை உயரும்; தீமை தாழும்; புண்ணியம் ஓங்கும்; பாவம் உறங்கும்.

8. உலக இன்பங்களைத் தேடி அடையும்படி நமது உடலின் உறுப்புகள் நமக்கு உதவுகின்றன. அவற்றை

வேறு ஒரு வழியிலும் நாம் உபயோகிக்கவேண்டும். கடவுளைச் சிந்தித்து நல்வழியில் அவயவங்களை நடத்துவது நமது கடமை. அப்படிச் செய்யாவிடின், நமக்கும் விலங்கு முதலியவற்றிற்கும் என்ன வேறுபாடு? கடவுளை அஞ்சலியாத கை விட்டுக்குப்போடும் உத்திரக்கைக்கு ஒப்பு. கடவுளை வணங்காத முடி வயலில் நடும் நாற்று முடிக்கு ஒப்பு. கடவுளைப் போற்றாத வாய் நீரோடும் கால்வாய்க்கு ஒப்பு. கடவுளைத் தேடிச் செல்லாத கால் பந்தக்காலுக்கு ஒப்பு. கடவுளைப் பாராதகண் புற்றுக் கண்ணுக்கு ஒப்பு.

கடவுளை அன்புடன் மனத்தினால் தியானித்தலும்,
கடவுளை அன்புடன் வாக்கினால் துதித்தலும்,
கடவுளை அன்புடன் கையினால் பூசித்தலும்,
ஆலயத்தை அன்புடன் காலினால் வலம்வருதலும்,
கடவுளை அன்புடன் சிரசினால் வணங்குதலும்,
அவர் புகழைச் செவியினால் கேட்குதலும்,
அவர் படைப்பைக் கண்ணால் தரிசிப்பதும்
நமது கடமையாம்.

## 4. செல்வப்பொருளோம்பல்.

1. பொருள் கல்விப்பொருள் செல்வப்பொருள் என இருவகைத்தாம். இவற்றுள் கல்விப்பொருள் சிறந்ததெனினும், செல்வ பொருளும் மானிடர்களுக்கு இன்றியமையாததே. அச்சிறப்பினாலன்றோ அது, பொருள் என்னும் சொல்லின் பலபொருட் பொதுமை நீக்கி, அதைத் தனக்கே உரிமையாக்கி, பொருள் என்னும் பெயராலே பண்டிதர் பாமரர் எவராலும் அவ்வாறு வழங்குவதாயிற்று.

தருமம் புரிதற்கும் இன்பம் அனுபவிப்பதற்கும் துணைக்காரணமாக வுள்ளது செல்வம். கல்வி பயிலவும் கற்றகல்வி தமக்கும் பிறர்க்கும் பயன்படச் செய்யவும் முக்கிய கருவியாகியுள்ளது செல்வம். நல்குரவினால் மெய்குலைந்து வருந்தாமல் சுகம் அளிப்பது செல்வம். செல்வப் பொருள் எல்லோர்க்கும் எந்நாளும் வேண்டுவதாதலின் அதனை ஈட்டிப் பாதுகாப்பது மாந்தர் கடமை.

2. கல்விப் பொருளுற்றோர் செல்வப் பேறு இல்லாரெனின் கடும்பசியாலும் கொடுநோயாலும் தீராக்கவலையாலும் வருந்திக் கற்றவற்றை மறந்து அதன் பயனைக் கொள்ளார். வறியோர்க்குறும் இடுக்கணோக்கி அவரது சிந்தாகுலத்தை நாம் ஒருவாறு அறியலாம். நல்கூர்ந்தாரை நாட்டார் மதியார். பகைவர் அவமதிப்பார். சுற்றத்தாரும் கைவிடுவார். பணமில்லாதவன் பிணம் என்பதாலும் அதன் உண்மை விளங்கும். தரித்திரக் கொடுமையால் சிலர் இரந்து காலம்போக்குவர். ஏற்கும் பொருட்டு நல்கூர்ந்தார் செல்வர்பாற் செல்ல மனந்துணிவது துன்பம். அவரில்லந்தேடி நாடுவது துன்பம். தாம் மானங்குன்றி அவர் முகநோக்கி மனநிலையறிவது துன்பம். தம்மனமொடுங்கி தங்குறையை வாய்விட்டு ஏனையோரிடம் புகல்வது துன்பம். கருணையுற்று அவர் அளிப்பதைத் தங்கைநீட்டி ஏற்பது துன்பம். அவ்வாறு பெற்ற பேற்றை அநுபவிக்கும்போது அதனைப்பற்றிச் சிந்திப்பதும் துன்பம். யாசித்துப் பொருள் பெறுவதினும் பசியால்வருந்தி இறக்கினும் இறக்கலாம்.

> ஈவதரிதல்ல வெஞ்சா வொருசாணுத்
> தாவென்று கேட்பதே தானரிது.

என்பதாலும் ஏற்பதிகழ்ச்சி என்பதாலும் அத்தொழில் மானத்தைப் போக்கும் என்பது திண்ணம். மானம் போன

வாழ்வு வாழ்வன்று. நல்குரவு பலவகைத் துன்பத்துக்கும் அன்னையாதலின், அது கொடிது எனப்பொருள்பட கொடிது கொடிது வறுமை கொடிது என ஔவை மொழிந்தனள். ஆனதுபற்றி வறுமை யொழிய செல்வப்பொருளைக் கைக்கொள்ள முயல்வது அவசியம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளங்கும்.

3. கல்லாரேயாயினும் கைப்பொருளுண்டானல், அப்பொருளுடையாரை உலகத்தார் நன்குமதிப்பர். சுற்றத்தார் சூழ்ந்துகளிப்பர். ஒன்னலரும் செருக்கற்றொடுங்குவர். ஆதலால் செல்வப்பொருளை இடையருது முயன்று நாம் விரைந்து தேடவேண்டும். பொருள் ஈட்டுமிடத்து நன்னெறி பற்றி ஆக்குவது முறையேயன்றி, தீயவழி சென்று அதனைத் தேடலாகாது. அப்படி ஈட்டுவது கயவர் நெறி. களவு செய்தல், சூதாடல், மோசஞ் செய்தல், பொய்மொழிதல், விசுவாசகாதகம், பரிதானம் பெறுதல் இராஜத்துரோகம் முதலியன தீயநெறிகளாம். இவற்றால் உறும் ஊதியம் முன் செய்திருக்கும் புண்ணியத்தைப் போக்கி இம்மையில் தீராதவசையை உற்பவித்து மறுமையில் மாளாத நரகத்தை விளைவிக்கும். ஆனது பற்றி நன்முயற்சியே நற்கருவியெனக் கொண்டு செல்வப்பொருளை ஈட்டல்வேண்டும்.

4. நற்றுறையில் மெய்வருந்திப் பாடுபட்டுப் பொருள் பெறுவதுடன் அப்பொருள் நம்பால் நிலைபெறச்செய்வதும் நமது கடமை. பருவதத்தின் சிகரத்துக்கு ஒரு கல்லையேற்றுதல் அரிது; அத்தலத்தினின்று அதனைப்புரட்டி அடிவரைக்குத் தள்ளுதல் எளிது. ஆழ்ந்த ஏரி நிரம்ப நிரைக்கட்டுதல் அரிது. கரையையுடைத்து அந்நீரைப் போக்குதல் எளிது. குடம் வனையக் குலாலனுக்குப் பல

நாள்கள் செல்லும். அக்குடத்தையுடைக்கத் தடிகாரனுக்கு ஒரு நொடி போதும்; வித்தின்றி மரம் வளர்த்தல் அரிது; வாள் கொண்டு அம்மரத்தைத் தறித்தல் எளிது. சிறந்த மாளிகையைக்கட்டுதல் அரிது; அதனை இடித்தல் எளிது. செல்வப்பொருளை யடைதல் அரிது; அப்பொருளை யழித்தல் எளிது. தமக்கு உறும் ஊதியத்தைச் சிலர் வீணர்க்கு அளித்தும் வீண் பிரதிஷ்டைக்காகவும் செலவிடுவர். இது மதிகேடு. இந்நெறிபற்றி யொழுகின் பொருள் நிர்மூலமாகி ஓட்டாண்டியாகத் திரியநேரும். எற்பவருக்கு இரங்குவது நமது கடமை யெனினும் எற்பவர்க்கு இல்லை யென்னுமல் நமதிகை வருவாய்க்கேற்பதாதலே வழக்காம்.

5. பெற்றோர் வழியால் நாம் அடையும் பொருள் தாயம் என்னப்படும். நம்முடைய முயற்சியால் தேடப்பட்ட பொருள் உடைமை என்னப்படும். பெண்ணின் பொருட்டு வருவதைச் சீதனம் என்பர். தாயத்தை விர்த்தி செய்யவேண்டும். அதைக் குறைக்கலாகாது. உடைமையைச் செலவிடலாம். சீதனத்தை நம்பொருட்டு உபயோகித்தல் தகுதியன்று. தொழில் முயற்சியால் பொருள் தேடுவதே சிலாக்கியம். அவ்வழியால் அடைவது கூழேயாயினும் அமுதத்துக்கு ஒப்பாகும். அறிவு, ஆண்மை, மானம், இவற்றை உடையவர் பற்றும் நெறி இதுவேயாகும். அப்படித்தேடும் பொருளை நல்வழியிலே செலவிட வேண்டும். அதனுள்ளே பெரும் பாகத்தைக் கிரகச்செலவுக்கு வைத்துக்கொள்வது கிரமம். எஞ்சி நின்றதில் ஒரு பகுதியை ஆஸ்திக்கும் மிகுந்ததைத் தருமத்துக்கும் உபயோகிப்பது நன்று. பொருளைத் தீயவழியிலே செலவிடலாகாது.

## 5. முன்சாக்கிரதை.

"நாளை நாளை யென்பீராயின், நம்முடைய முறை
நாளாவது மறியீர் நமனுடைய முறை நாளாவது மறியீர்."

1. ஒரு நதிமடுவில் வருமுன்காப்போன், வருங்காற் காப்போன், வந்தபின்காப்போன் என்னும் நாமம் பூண்ட மூன்றுமீன்கள் சஞ்சரித்தன. இவை நீண்டகாலம் நகமுஞ் சதையும்போல இணங்கி உரிமைபூண்டு வாழ்ந்துவந்தன. இதற்கிடையில் வேனில்பிறந்து கதிரவன் கிரணம் கொடுமையாய்த் தகிக்க, அம்மடு நீரனைத்தும் கால்வாயில் வடிந்தும் காய்ச்சலால் வற்றியும் குறைந்துவந்தது. அதுபற்றி செம்படவர் ஆங்கு ஏகி, வலை வீசுதற்குத்தக்க அற்றம் உற்றதெனக் கருதி, 'நாளை இதிலுள்ள மீன்களெல்லாம் பிடிப்போம்' என்றும் பேசிப்போனார்கள். இம்மாற்றம் வருமுன்காப்போன் செவியில் விழ, அச்சலசரம் அச்சங்கொண்டு ஞேயர்பாற்சென்று பின்வருமாறு புகலலாயிற்று.

"இம்மடுநீர் வறண்டும் வடிந்தும் போகின்றது. வலைஞர் 'நாளைவந்து வலைவீசுவம்' என்றும் பேசிப்போயிருக்கின்றனர். எண்ணியவாறு அவர்கள் செயின், நாம் வலையிற் சிக்கிக்கொள்வது திண்ணம். நாம் உயிர்தப்பி உய்யும் உபாயம் தேடுவதே உசிதம். இத்தலத்தில் இனி கணப்பொழுதேனும் தரிக்கொணாது. வெள்ளம் வருமுன் அணைபோடவேண்டும். நாசம் உறுவதன்முன் ஆய்ந்து எற்கும் உய்தி தேடுவதே நன்முறை. மயக்கமற மனந்தெளிந்து மடைவாயில் ஒழுகும் நீர் வழியேசென்று வேற்றுக்குள முதலியவைகளை அடைந்து பிழைப்போம் வாருங்கள்."

2. வருங்காற்காப்போன் சிற்றங்கொண்டு, "நண்பனே, நீ இவ்வாறு கழறுவது அழகோ? இவ்வுழி நாம்

நீண்டகாலம் வாழ்ந்து சுகித்தோம். இதனை விட்டகல மன முறுமோ? பன்முறையும் செம்படவர் இங்கு வலை வீசினாரன்றோ? ஒவ்வொரு சமயத்திலும் நாம் தப்புவித்துக் கொள்ளவில்லையா? விதி வலிது. அதைச் சிதைக்க யாரால் மாளும்? நாளை யாவதற்கு இன்றென்ன ஏற்பாடு? தவறி விபத்து உறுவதெனின், தருணத்துக்குத் தக்க யுக்தி உதிக்கும்," என வெட்டெனக் கூறியது.

3. மித்திரர் இருவர் மொழிந்தன வந்தபின்காப்போன் செவியில்மோத, அது குறுநகைகொண்டு, நேர்த்தி! இதுவெகு நேர்த்தி!! நிலைவிட்டகலவது கயவர்நெறி. 'நிலையிற் பிரியேல்' என்னும் ஔவை மொழியின் நுட்பம் நீ தெரிந்திலை. வரத்தக்கது வந்தேதீரும். வரத்தகாதது வருந்தி யழைத்தாலும் வராதன்றோ? எவ்வினையும் தலையெழுத்தின்படி முற்றுப்பெறும். அதையழித்து வரைய யாரால் இயலும்? உனது கற்புக்கியைய நடப்பதெனினும் நினைத்த மாத்திரத்தில் சாத்தியமா? புராதனவிடத்தில் தப்புவிக்க மாட்டாதநாமா நூதன தலத்தில் தப்புவோம்? அவசரப்பட்டுச் செய்பவன் அவமானம் அடைவான். ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு என்பதாக முடியும் என்று நடித்தது.

4. இவ்வண்ணம் அன்பர் உரைத்ததை வருமுன்காப்போன் கேட்டு மனம் வருந்தி மீண்டும் சொல்லலுற்றது. 'பார்க்கமாட்டோம் என்பவரைப் போன்ற குருடர் என்பதும், கேட்கமாட்டோம் என்பவரைப் போன்ற செவிடர் என்பதும் உங்கட்கே பொருந்தும். நீங்கள் இயம்பியவாறு விதிவலிதெனினும் அதனைமதியால் வெல்லலாகும். கேடுவருமுன் மதிகெட்டுவரும் என்பதுபோல் உங்கள் புத்திக்கு மோசம் உற்றது. பட்டால் தெரியும் பார்ப்பவனுக்கு என்

பதற்கிணங்க, தலையிலிடிந்தாற்றான் தாழக்குனிவீர்கள். எண்ணித்துணிக கருமம்.'

5. வருங்காற்காப்போனும் வந்தபின்காப்போனும் குலுங்கநகைத்து 'வரமாட்டோம்' என்றே பிடிவாதங்கொண்டன. வருமுன்காப்போன் தன் எண்ணம் கடைத்தேறாதது கண்டு துக்கித்து, கேடு கண்கூடாப்பட்டதெனினும் கீழ்மக்கட்கு உணர்ச்சி பிறவாது என்பது இவர்கள்பால் நிதரிசனமாய் விளங்குகின்றது. 'என்னில் யாரும் எனக்கினியாரில்லை' என்பராதலின் என்னுயிரை நானே பேணல்வேண்டும். நீங்கள் மொழிந்த முறையே அனைத்தும் விதிப்படிமுடியும். நான்போய்வருகிறேன்." என்று நவின்று, செலவு பெற்றுக்கொண்டுதன்னந்தனியே யோர்தோயநிலை அடைந்தது. அந்தரங்க ஞேயன் கூறிய நயமான புத்திக்குச் செவிகொடாமல் மற்றைய விரண்டும் அம்மடுவிலேயே இருந்தன.

6. மறுநாள் வைகறையில் வலைஞர் உன்னியபடி வந்து வலைவீச, மச்சங்கள் இரண்டும் அவ்வலையிற் சிக்கிக்கொண்டன. வருங்காற்காப்போன் மெய்பதற உள்ளஞ்சிதறப்பதைபதைத்து உய்வழிதேட நினைந்து ஆடாமல் ஓய்ந்திட்டபம்பரம்போல் விசையடங்கி செத்தாற்போல மாயநடிப்புநடித்தது. செம்படவர் இதைப் பாசாங்கென்றறியாமல் உண்மையென நினைந்து அதை யெடுத்துக்கரை மீதுபோட அச்சலசரம் நாசமுறப் பாசம் வீசியவர் கண்ணுக்கு விலகி நீருட்புகுந்து ஒளித்துக்கொண்டது. வந்தபின்காப்போன் தன்தோழன் மொழிந்தவண்ணம் நிறைவேறியது கண்டு எண்ணியெண்ணிக் கண்ணீர் சொரிந்து மனம் விண்டு தப்பவழிதெளியாது இங்குமங்குமோட, அது தடியாலடிபட்டு மாய்ந்தது. மற்றைய விரண்டும் சுகமடைந்தன.

7. எவற்றையும் ஆராய்ந்து செய்யவேண்டும். முன் சாக்கிரதை யுள்ளவர்கள் ஆபத்துக்குத் தப்பிப் பிழைப்பார்கள், எண்ணிப்பாராதவர்கள் சங்கடத்துக்கு உள்ளாவார்கள்.

| | |
|---|---|
| வெள்ளம் வருமுன் | அணைபோடவேண்டும். |
| கேடுவருமுன்னே | நாடி அதை விலக்கவேண்டும். |
| கேடுவருமுன்னே | விலக்குவோன் உத்தமன். |
| கேடுவரும்தருணத்தில் | விலக்குபவன் மத்திமன். |
| கேடுவந்தபின் | விலக்கமுயல்பவன் அதமன். |
| அதமர் செய்கை | கேடாய்முடியும். |

## 6. எவையும் நன்மைக்கே அமையும் என்னுந் துணிபு.

1. ஒரு கிராமத்தில் ஒரு தனவான் இருந்தான். அக்குலத்திற்குத் திலகனும் ஏகபுத்திரனுமான அவனுடைய அருமந்த சிறுவன் அரவந்தீண்டி உயிர்மாண்டான். அவ்வுடலைச் சுற்றமித்திரர் இடுகாட்டிற் கெடுத்தேகவும், மாதா பிதா இருவரும் உடன்தொடர்ந்து, செல்வப் புதல்வனுடலை பார்த்துப் பார்த்து, அவன் வடிவும் அழகும் புத்தியும் மழலைச்சொல்லும் தம் மனத்தினின்று நீங்காத துயரத்தை விளைத்ததனாலே புதைக்க மனம்வராது, அவ்வுடலருகே இருந்து புலம்பிக்கொண்டிருந்தனர். அத்தருணத்தில் அத்தலவாசியான கழுகு ஒன்று புத்திரசோகமடைந்த அவ்விரு முதுமக்களைக் கண்ணோக்கி, ஓ மானிடர்காள்! நீங்கள் ஆறறிவுற்ற சிரேட்டர்களாயிருந்தும், பிரேதத்தை வனத்தில் வைத்துக்கொண்டு மேல்வரும் காரியம் தெளியாது வீண்காலம் போக்குகின்றீர்கள். இத்த

லமோ பூதகணங்கட்கு உறைவிடம். ஓர்கால் உங்களுக்கும் அபாயம் உறினும் உறும். தினகரன் மலைவாயில் விழப்போகிறான். பேரிருள் சூழ்ந்து மோசம் வருமுன் பிரேதகருமமுடித்து விரைந்து நடவுங்கள். ஆண்டாண்டு தோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் வருவரோ? இவ்விடத்திலே தேவரும தங்க அஞ்சுவர். ஆனது பற்றி உயிர் தப்பியோடி உய்யுங்கள், என்று இயம்பிற்று.

2. இம்மொழி செவியிலேறப்பெற்று இருவரும் மதி மயங்கி, தம் பிராணபயமேற்கொண்டு, இளவலுடலை அடக்கஞ்செய்யாமலே அவ்விடம் போட்டுவிட்டு இல்லநோக்கி விரைந்தோடினர். வழியில் எதிர்ப்பட்ட நரி ஒன்று அவர்களை மறித்து, "நீங்கள் இவ்வாறு ஓடுவதற்குற்ற நியாயம் யாது?" என்று வினவ, நிகழ்ந்த வர்த்தமானங்களை அவர்கள் தெரிவித்தார்கள். அதைக்கேட்டுக் குலுங்க நகைத்து, "உங்கட்கு என்ன பைத்தியம்! உருத்திரபூமியில் பேய்களாகிய வருமோ? தீபம் ஏற்ற இன்னும் ஒரு நாழிகைப் பொழுது இருக்கிறது. அதுகாறும் நீங்கள் அருமையிலும் அருமையாய்ப் பெற்றுவளர்த்த சிசுவைக் கண்ணினும் பார்த்துக் கையினால் அணைத்து முத்தமிட்டுக் கவலை தீருங்கள். ஒருவேளை பிராணவாயு கபாலத்திலடங்கித் திரும்பினுந் திரும்பும். மைந்தன் பிழைக்கினும் பிழைப்பான். இவ்வித மரணத்திற்கு உயிர்போய்த் தொண்ணூறு நாழிகை பரியந்தம் பிரேதத்தை வைத்துப்பார்க்கும்படி ஒரு சித்தாந்தமும் உண்டு. அவ்வாறிருக்க உங்கட்கு அவசரம என்ன? நீங்கள் கல் மனதுடையவர்களே! பெற்றவர் மனம் பித்து எனப் பாருளோர் மொழிவார்களே! அம்மாற்றமும் வழுவுளதெனப் புலப்படுகின்றது. பெற்ற மதலையைக் கட்டித்தழுவி இன்னுஞ் சற்று அழாமல், மயானத்திற் போட்

டுப்போக மனந்துணிந்ததோ" என்று கண்ணீர்விட்டு அவர்களுடன் அது சலந்து அழுதது.

3. சீமானும் சீமாட்டியும் நரிக்குப் பிறந்த இரக்கத்தைக்கண்டு வெட்கித் திரும்பவும் சேயுடலிடஞ் சென்றனர். மீண்டும் அக்கழுகு நகைத்து, "ஓ நண்பர்களே, நரியின் மாற்றத்தை நம்பலாகுமா? போன பிராணன் திரும்புமா? அவ்வாறு கண்டதாவது கேட்டதாவது உண்டா? இம்மண்ணில் மாண்டவர்க்குக் கணக்கில்லை. சுடுகாட்டுக்குப் போனபிணம் திரும்பினது உண்டா? ஐயோ! மஹேசமுனி வரும் தருணம் கிட்டுகிறது," என, இதைக்கேட்டதும் கேளாததுமாய் இருவரும் ஒட்டம் பிடித்தனர்.

4. வழியில் சம்பு இவர்களைக் கண்டு நகைத்து, "இருட்டுமட்டு மாயினும் புத்திரனிடம் இருந்து பிரலாபிக்கலாகாதா? நாளைப் பார்க்கப்போகிறீர்களா? மாண்டார் மீளார் எனச் சிந்திக்கவேண்டாம். ஸர்வலோக நாயகன் அருளால் சிலர் பிழைக்கவில்லையா? அவருக்குக் கிருபை உதிக்கின், உயிர்ப்பிச்சை தாராரா? போன பிராணன் கணப்பொழுதில் திரும்பாதா? மனோவாக்குக் கெட்டாத பரமனுடைய திருவிளையாடல் எப்படியிருக்குமோ? அதனை யார்தான் அறியக்கூடும்? பிழைப்பு மூட்டி புத்திரசோகந் தீர்க்கினும் தீர்ப்பர், பிள்ளை செத்ததும் அதை நீங்கள் எறிந்து விட்டுப்போவதும் விந்தையினும் விந்தையாயிருக்கின்றது. விலங்கினத்துக்கு இவ்வாறு மனந்துணியாது. அஸ்தமிக்குமட்டும் இங்கிருந்து சஞ்சலந்தீர வழுது சலித்து மனம் வெறுத்துப்போனால், பின்னர் இம்மகவின் நினைப்பு வராது. சட்டிசுட்டதுங் கைவிட்டதும் என்று போகின், 'இதுவே எந்நேரமும் நினைவு, காண்பதெல்லாம் அதுவே கனவு" என்று பயங்காட்டித் தேற்றி மீண்டும் உருத்திர பூமிக்கு அனுப்பிவைத்தது.

5. உவணம் கண்டு, 'ஐயோ! இவர்கள் போய்விட்டால், பொழுதிருக்கும்போதே பிணத்தைப் பிடுங்கித் தின்று வயிறும் நிரப்பலாம்' என்று எண்ணி, அப்பா! இங்கிருக்க எனக்கே பயமாயிருக்கிறது. முனிவருகிற வேளையாயிற்று, இதோ போகிறேன், என்று பறந்து பயங்காட்டிற்று. சிறுகாலன் 'பொழுது போகிற வரையில் இவர்கள் இங்கிருந்தால், கழுகுக்கு இவ்விரை கிட்டாது. இருட்டினால் அது தலைகாட்டாமல் ஓடிப்போய்விடும். இவர்களும் முதுகாட்டில் இரார்கள். அப்பொழுது நமக்கும் நம்மினத்தாருக்கும் கொண்டாட்டம். பிணத்தைப் பிடுங்கித் தின்னலாம்' என்று எண்ணிக் காத்திருந்தது.

6. பரிதியும் மேற்றிசைக் கடலில் மூழ்கினன். இருவரும் மனந்தளர்ந்து நடுநடுங்கி, செய்வழி தெரியாமல் கலங்கிக் கடவுளை நினைந்து திகைத்தார்கள். குழந்தைக்குத் திடீரென்று சூடு உண்டாயிற்று. ஒரு நாழிகைக்கெல்லாம் குழந்தை தூங்கி எழுந்தது போல் எழுந்தது. பெற்றோர் மனம் பூரித்து ஆசைப் பெருக்கத்துடன் அருமை மகனை எடுத்து மார்போடணைத்து முத்தியிட்டு ஆனந்தக் கடலில் மூழ்கினவர்களாய்ப் பிள்ளையை எடுத்துக்கொண்டு இல்லஞ் சென்றார்கள்.

7. உலகத்தார் தங்கள் சுயநயத்தை விரும்பியும் பிறருக்குப் போதிப்பார்கள். எதையும் நாம் நன்கு ஆராய்ந்து யோசித்துச் செய்யவேண்டும். நமக்கு எவ்வித இடுக்கண் நேர்ந்தாலும் 'எவையும் நமது நன்மைக்கே யமையும்' என்றெண்ணி மனந்தேறிக் கடவுளைப் போற்ற வேண்டும்.

## 7. வறுமையும் செல்வமும் ஓரிடத்தில் நிலையா.

1. முன்னோர் காலத்தில் ஓர் ஊரில் வேளாளன் ஒருவன் வறுமையால் வருந்தி நோயால் மெலிந்து வருத்த

முற்றிருந்தான். அவனிடத்திலிருந்த தலையீற்றுக் கிடாரி யொன்று சினைப்பட்டுக் கன்று போடக் கஷ்டப்பட்டுக் கதறினது. பசு படும்பாட்டைப் பார்த்துப் பார்த்துப் பதறிக் குடியானவன் மனந்தளர்ந்து 'ஐயோ, வாயிலாச் சீவன் வாதைப் படுகின்றதே!' என்று விசனமுற்று ஏங்கி நின்றான்.

2. அத் தருணத்தில் அண்ட கோளம் அதிரக் கொண்டல் முழங்கி நாற்றிசையும் இருட்டி இடியும் மின்னலும் காற்றும் குளிரும் சேர்ந்து வெகு பயங்கரமாக மழை தாரை தாரையாகப் பொழிந்தது. வீடெங்கும் ஒழுகி மாட்டுக் கொட்டிலும் தாளமாட்டாமல் அடியோடே விழ, அதைக் கண்ணுற்ற வேளாளன் மனஞ் சோர்ந்து, பசுவைப் பாதுகாக்க நினைந்து அதைக் கட்ட வசதியான இடம் ஒன்று தேடலானான். இதற்கிடையில் தாயில்லஞ் சென்றிருந்த அவன் மனைவி கருப்பவேதனைப் படுகிறாள் என்னுஞ் செய்தி எட்டியது. வேளாளன் செய்காரியந் தோன்றாது 'அநாதிக்குத் தெய்வமே துணை' என்றெண்ணித் தன் மாட்டுக்கு ஒரு இடந்தேடி அதை அத்தலத்தில் கொண்டுபோய்க் கட்டினான். பின்னர் தான் ஏர் கட்டி உழுது எருவிட்டுப் பரம்படித்துப் சேடையாடிப் பண்படுத்திய கழனியில் ஈரம் இருக்கையில் விதை விதைக்கலாமென்று நோக்கங்கொண்டு, தன்னிடம் படிபெற்று ஊழியஞ் செய்யும் அடிமையை அழைக்க விரைந்தோடினான். அவன் வீடுபோய்ச் சேர்ந்து பண்ணையாள் மாரடைத்து முகநாடி வெளுத்து வேறுபட்டு படுத்த படுக்கையில் மூச்சடங்கிக் கிடந்ததைக் கண்டு புழுப்போல் துடித்தான். 'பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்னும் உலக வழக்கு எனக்கே பலித்தது. பண்ணையாளில்லையாயின்

விதை விதைத்து நாற்றுவிட்டுப் பிடுங்கி நட்டுக் களை பிடுங்கி நீர் பாய்ச்சுவதும் கருத்து கருக்கொண்டு விளைந்து மணி முற்றித் தலைவணக்கும்போது அரிகட்டிப் போரடித்து மாசூல் விடுகொண்டு சேர்ப்பதும் ஏது?" என்று கன்றிழந்த பசுப்போல் கதறிச் சிறகொடிந்த பட்சிபோல் திகைத்தான். தானே போயாகிலும் விதைத்துவருவது உசிதம் என்று நினைந்து தானிய விதைகளை எடுத்துக்கொண்டு புலத்தை நோக்கி வேளாளன் சென்றான்.

3. அவ்வாறு ஓடுகையில் வழியிற் பாம்புகுறுக்கிட்டதுபோல் முன்னோர் காலத்தில் இவனுக்குக் கடன்கொடுத்திருந்த வணிகன் ஒருவன் எதிர்ப்பட்டான். "கல்லுந் தேங்காயும் சந்தித்தவாறு" இன்று நான் உன்னைக்கண்டேன். இத்தினம் நற்றினம், கைமீது தொகையைவைத்து விட்டு அடியெடுத்துவை. இல்லாவிடில் பரீக்ஷை,' என்று ஏகத்தே சமாய் வெருட்டினான். பேயைக்கண்டாற்போல் வேளாளன் நடுநடுங்கி, 'பொருள் இல்லையாயின் இழிதொழில் புரிந்து வயிறுவளர்க்கினும் வளர்க்கலாம். ஏற்பது இகழ்ச்சியெனினும், பிச்சைபெற்று உண்ணினும் உண்ணலாம். பசிநோயால வருந்தி இறக்கினும் இறக்கலாம். பெருவியாதி முதலிய கொடுநோய்களின் துன்பத்தைப் பொறுக்கினும் பொறுக்கலாம். கடனுறும் துன்பத்தைப்பொறுத்தல் அரிது அரிது,' என்று சிந்தாகுலமடைந்தான். அவன் தழலில் விழுந்த மெழுதுபோல உருகி, பாம்பின்வாயில் அகப்பட்ட தேரைபோல் தவித்து, இராமபாணம் எய்யப்பட்ட காலே தசமுகன் மனம் கலங்கினதுபோலக் கலங்கி, 'ஐயோ! புலியின்வாயில் புகுந்து வெளிப்படினும் வெளிப்படலாம். மனிதர் படுந்துயரை யெண்ணாமல் இடர்புரியும் திஷ்டரேனுகிய கடுவட்டிவாங்கும் இப்படுபாவியினின்

றும் எப்படித் தப்புவேன், என்று பற்றி அலையிற் றுரும்பு போல் தவித்தான்.

4. இத்தறுவாயில் துரைத்தனத்தாருக்குச் செலுத்த வேண்டிய சென்ற ஆண்டு நிலுவைக்காகத் தண்டற்சேவகன் எதிர் நின்று, 'இறைப்பணத்தைச் செலுத்து. இல்லாவிடின், உன்னைக்கொண்டுபோய்க் கட்டையில் அடிப்பேன். நெற்றிமேல் கல்வைத்து வெயிலில் நிறுத்துவேன். குண்டுருட்டாய்க் கட்டிக் கிட்டியகோல் பாய்ச்சுவேன். அண்ணாந்தாள் பூட்டுவேன். தொப்புளில் வீரமுள் சொருகுவேன். தொண்டையில் சூலாணி குத்துவேன். ஆற்று மணலில் உருட்டிக் கொடிய வெயிலில் தள்ளுவேன்,' என்று இவ்வாறு கடிநாய்போல் வெட்டென மொழிந்தான். அதற்கு வேளாளன் 'இதென்ன விபரீதம், எருதின் நோய் காக்கை அறியுமா? இவன் கன்னெஞ்சைக் கரைத்து உருக்கும் வரம் எனக்கேது? இந்த விடாகண்டகனுக்கு என்வழி சொல்வேன்? என்று மனம் வெந்து புகைந்து வருந்திப் பிரலாபித்தான். அவன் மனம் பட்டபாட்டை என்னவென்று உரைப்பேன். ஒன்றுந்தோன்றாமல் அவன் ஆந்தைபோல் விழித்துத் திகைத்தான். சற்றுத்தெளிந்து வேளாளன் இருவரையும் உபசாரமாய் நயமுறச் சமாதானப்படுத்தி வழிவிட்டுக் கழனிபோய்ச்சேர்ந்தான்.

5. அங்கே வேளாளனுடைய குலகுரு எதிர்ப்பட்டு 'அப்பா, கடந்த மூன்றாண்டாய் உன்பொருள் ஒன்றும் குருவைச்சேரவில்லை. உன்னால் இயன்றதை பாதகாணிக்கையாகக்கொடுப்பாயானால் உனக்குச் சுகம் சேரும். நற்பேறுபெறுவாய்', என மொழிந்தார். இவ்வசனம் குடியானவன் செவியில்விழ, அவன் கொடுப்பதற்கோ என்னிடத்தில் ஒன்றும் இல்லை. கொடாவிடின் அபசாரத்துக்கு ஏதுவாகும். என்ன செய்வேன், தெய்வமே! ஏழைமேல் உனக்கு இரக்கம் பிற

க்கவில்லையே. என்னைக் கடைக்கண்ணால் பார்த்துக் கடைதேறச் செய்யலாகாதா? என்று மனதுக்குள்ளே நினைந்து குருதரிசனம் கிடைத்ததற்கு ஆனந்தித்துக் கூப்பியகரத்தனாய் ஒடுங்கிய மெய்யனாய் அடிவணங்கித் தொழுது நின்றான். இவ்வேளையில் அவனுக்குற்ற மனக்குறை தெய்வத்திற்கன்றி உள்ளபடி வேறெவர்க்குத் தெரியும்?

6. இவ்வாறிருக்க அவ்வூர்க்கவிஞன் ஒருவன் நெருங்கி தன்கவனத்தைக் கேட்டுத் தனக்குப்பரிசு அளிக்கும்படி வேண்டினான். குடியானவன் மனங்குன்றி முன்னும்போகாமல் பின்னும்போகாமல் தடுமாறித் தத்தளித்தான். 'காலைச் சுற்றின பாம்பு கடித்தாலொழியப்போகாது. அவ்வண்ணம் இப்பாவலன் நம்மிடத்தில் ஒன்றும் பெறுமல் போகான்,' என்று சிந்தித்து, ஒருவாறு மனந்தெளிந்தான். பிறகு தான் கொணர்ந்த விதையில் குருவுக்கும் நாவலனுக்கும் கொஞ்சம் அளித்துப் போற்றினான்.

7. இருவரும் உள்ளமுவந்து வேளாளனை மங்கலமொழிகளால் நெஞ்சார வாழ்த்திச் சென்றார்கள். விதைவிதைக்க எத்தனிக்கையில் அங்கே புற்று ஒன்று தோன்றியது. கிட்டி நெருங்கி உற்றுப்பார்க்கையில், பளிச் என்று ஏதோ மின்னல்போல் மின்னியது. மண்வெட்டியால் வெட்டிப்பார்க்கவிலைபெற்ற இரத்தினங்கள் நிறைந்த வெண்கலப் பாத்திரம் ஒன்றைக்கண்டான். அப்பொழுது அவனுக்கு உண்டான சந்தோஷத்தை அளவிடமுடியுமா? வந்தது கப்பல் மலர்ந்தது தொப்பை என்பதுபோல, வேளாளனுக்கு ஒரு புஜம் இரு புஜமாய்ப் பூரித்தது. அவன் கடவுளைப்போற்றிக் குருவை நினைந்து, 'குரு கடாட்சத்தால் அன்றோ இப்பொருள் நமக்குக் கிடைத்தது' என்று எண்ணி, புதையலை வீட்டுக்கு எடுத்துப்போனான். வழியில் அண்டைவீட்டுக்

காரன் கண்டு 'அப்பா, மாரடைந்து மூச்சடங்கியிருந்த உன் பண்ணைக்காரன் பிழைத்துக் கொண்டான். உன் பசு கிடாரி ஈன்றது. உனக்குப் புத்திரபாக்கியமும் கடவுள் அருளால் கிடைத்தது' என்றான். பிறவிக் குருடனுக்குக் காட்சி கிடைத்ததுபோல வேளாளனுக்கு நற்காலம் பிறந்தது.

வறுமையும் செல்வமும் ஓரிடத்தில் நிலையா.
கடவுளைப் போற்றுதலும் குருவுக்கு ஈதலும் வீண்போகா.
நாம் எதிர்பாராத நன்மையை அளிக்கவல்லவர் கடவுளே.
துன்ப காலத்தில் துன்பம் ஒன்றின்மேல் ஒன்றாய் வரும்.
நாம் படும் துன்பம் நமது நன்மைக் கென்றேயிருக்கும்.
நமது பொருளைக் கைப்பற்ற நோக்கங் கொள்பவர் நமது சுகத்தை நாடார்.

## 8. ஸர் ஐஸக் நியூட்டன்.

1. ஸர் ஐஸக் நியூட்டன் அங்கிலேய நாட்டுச் சிறந்த பண்டிதர்களுள் ஒருவன். உலகப் பிரசித்திபெற்ற வித்வ சிரோமணிகளுள் ஒருவன் நியூட்டன் எனினும் அமையும். விளையும் பயிர் முளையிற்றெரியும் என்பதற்கு இணங்க, இளம் பருவத்திலேயே இயற்கையாலாய நுண்ணறிவு அவனிடத்தில் விளங்கிற்று. பின்னர் அவனுக்கு வரற்பால தாய கீர்த்திக்கு அறிகுறியாகச் சிறு பிராயத்திலேயே அவன் பெருமை தழைத்தோங்கியது.

2. அவன் பாடசாலையிற் பயிலுங்காலை தன்னுடன் கற்கும் ஒருசாலை மாணாக்கர்களும் போதிக்கும் ஆசிரியர்களும் உவந்து வியக்கத்தக்க அற்புத இயந்திரங்களை அமை

த்து வருவான். பருவ[illegible]யர்ந்து சர்வகலாசாலை சென்ற பின்னர் ஆதித்தாதி ம[illegible]லங்களைப் பற்றியும் ஆகாயம் நீர் முதலியவற்றைப் பற்[illegible]யும் கற்றுத் தெளியப் பேரவாக் கொண்டு மிகுந்த ஊக்கத்தோடும் கவனத்தோடும் பன்னூல்களையும் ஆய்ந்து, அவ்வாராய்ச்சியைப் பன்முறையும் சிந்தித்துவருவான். விடாமுயற்சியே முதற்கருவியெனக் கடைப்பிடித்து, அல்லும் பகலும் கைக்கொண்ட கருமமே கண்ணாயிருப்பான்.

3. ஒருநாள் தன் பூஞ்சோலையில் தன்னந்தனியே அவன் வீற்றிருக்கையில் ஒரு தருவினின்றும் பழம் ஒன்று கீழே வீழ்ந்ததைக் கண்ணுற்று, 'இக்கனி கீழே வீழுவதற்குற்ற நியாயம் யாது?' எனத் தனக்குள்ளே யோசிக்கலுற்றான். 'விழுந்தன்மை கனியினிடம் வாய்ந்த இயற்கையோ? அவ்வாறின்றி இவ்வகைப் பொருளைக் கவரும் சக்தி இப்புவிபால் உளதோ?' என ஐயமுற்று மனத்துள்ளே பரிசீலனை பண்ணலானான். புத்திநுட்பமுள்ளோர் ஆராய்ச்சி பலன் அளியாமற் போமோ? தனக்குட்டோன்றிய மயக்கம் அற்று, பூமி ஆகரிஷண சக்தியுடைமை பற்றியே கனி கீழ் விழலாயிற்று எனத் தெளிந்துகொண்டான். இவ்வகைப் பூமிக்கவர்ச்சி இயற்கையமைப்புகளுள் ஒன்றென்பதும், அதுபற்றியே புவிமீது கிடக்கும் தனிப்பொருள் அனைத்தும் ஆகாயத்தில் ஊடுருவிச்சென்று பறவாமல் நிலமீது இருக்கின்றன வென்பதும் அவனுக்கு நன்கு விளங்கின. நாளாவர்த்தியில் இவன் கீர்த்தி எண்டிசையும் எட்டிச் சீரியரும் பாரியரும் களிகூறற் கேதுவாயிற்று. 'ஆராய்ச்சித் துறையிலே ஆழ்ந்த கருத்தனாயிருக்கும்போது உணவு கொள்ளும் காலத்தையும் மறந்து விடுவான்' என்று அவன் றன்மை யறிந்தார் வாய்ப்பறையறையலானார். அண்ட

கோளங்கள் தங்கள் உருவத்திற்குத் தக இடையிலுறும் தூரத்திற் கேற்ப ஒன்றை யொன்று கவர்கின்றனவென்று பிரசித்தப்படுத்தினவன் அவனே. ஆதித்தனின்றும் பிறக்கும் ஒளிமிகிய வெண்கிரணம் ஒவ்வொன்றும் வெவ்வேறான சப்த வர்ணங்களையுடையதென்று. பிரசுரஞ்செய்தவனும் அவனே. அதற்குமுன் வானசாஸ்திரிகள் கண்டறியாத அநேக அற்புத அதிசயங்களை உலகுக்கு விளக்கினவனும் அவனே.

4. இத்தன்மைய புமானின் பெருமையைப் பொன்மலர் நாற்றம் பெற்றது போலத் துலங்கச்செய்தவை அவன்பால் விளங்கிய அடக்கவொடுக்கமும் வாய்மையுமேயாம். சாந்த குணமும் பொறுமையும் உடலும் நிழலும் போல அவனை விட்டு இணைபிரியாமல் விளங்கின. ஆறுவது சினம் என்பதைக் கைப்பற்றி, பொறையில் பூதேவியின் அருமைப் புதல்வன் போன்றான் எனப்பெயர் படைத்தனன். அக்காலத்துக் கற்றோருள்ளே சிரேட்டனெனினும், அவன் சல்விச் செருக்கடைந்ததேயில்லை. அவன் இளகிய நெஞ்சன். அருளுக்கு இருப்பிடம். கற்றோரும் மற்றோரும் வியக்கும் குணக்குன்று.

5. டயமண்ட் என்று நாமஞ் சூட்டப்பட்ட ஒரு நாயிடத்தில் அவன் மிக்க அன்பு பாராட்டித் தன்னுயிர்போல் பாவித்து அதை அருமையிலும் அருமையாக வளர்த்து வந்தான். ஒருநாள் நியூட்டன் தன் படிப்பறையை விட்டு வெளியே போயிருக்கையில், அச்சுணங்கன் மேசையின்மீது தாவி ஆங்கு ஏற்றிவைத்திருந்த வர்த்தியைத் தள்ளி எஜமானன் பரிசோதனை செய்தாய்ந்த குறிப்புகளனைத்தையும் அக்கினிபகவானுக்கு அர்ப்பணம் பண்ணிவிட்டது. நியூட்

டன் பல்லாண்டாகப் பட்ட பாடெல்லாம் பாழாயிற்று என்று அப்பிராணி அறிந்திருக்குமோ? தான் கொடுத்த கருமத்தால் இத்தன்மைய கேடு உறும் என்று அது அறிந்திருக்கின், தனக்கு இரையளித்துப் பாதுகாத்துவரும் எஜமானனுக்கு இத்தீங்கிழைத் திருக்குமா? நியூட்டன் திரும்பி வந்து ஆராய்ச்சிக்குறிப்பனைத்தும் அறிந்து சாம்பலானதைக் கண்ணுற்றுத் துக்கித்தா னென்னினும் அறியாதுசெய்த சுவானத்தின்மீது வெகுளி கொண்டவன் அல்லன். அவன் அப்பிராணியைக் கண்ணோக்கி, ஆ! என் அருமை டயமண்டே! உன்னால் உற்ற விபரீதம் இவ்வளவு பெரிது என நீ அறியாய், என்று சொன்னனேயன்றி வேறொன்றும் செய்திலன்.

## 9. கற்றுய்ந்தொழுகல்.

1. கல்விப் பொருளையும் செல்வப் பொருளையும் சீர்தூக்கின் மானிடர்க்குச் செல்வப்பொருள் இன்றியமையாதெனினும் கல்விப்பொருளே சிறப்பைத் தருவதாகும். கல்வியாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றுணர்தல். கற்றற்குரிய நூலகளாவன;—அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் பயனையும் பெறுதற்கு நெறி வகுக்கும் நூல்களாம்.

2. இருவகைப் பொருளுக்கும் வேறுபாடு உண்டு. செல்வப்பொருளைச் செலவிடின், அது தேய்பிறைச் சந்திரன் போலக் குன்றி முடிவில் சூனியமாகும். கல்விப்பொருளோ, அதை வழங்குவதற்கு ஏற்ப, வளர்பிறைத் திங்கள் போல் விருத்தியடைந்து அந்தத்தில் துல்லியமாக விளங்கும். செல்வப் பொருளை வெள்ளம், நெருப்பு நாசஞ் செய்யும், கள்வர் அபகரிப்பர், தாயத்தார்கள் கொள்வர். கல்விப்

பொருளையோ வெள்ளப் பெருக்குந் தீச்சுடரும் நெருங்கா, சோரர் கைப்பற்றார், தங்குடித்தமர் வகுத்துக்கொள்ளார். செல்வப் பொருளை மன்னர் பொறாமைகொண்டு கைக்கொள்வர். கல்விப்பொருளை வேந்தனும் வெல்லமுடியாது. செல்வப்பொருள் பிறர்க்கு ஈயுந்தோறும் குன்றும். கல்விப் பொருளோ விரும்பினவர்க்கெல்லாம் வழங்கினும், விருத்தியுற்றோங்கி.

> "தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத்தூறு மறிவு."

என்றபடி, மேன்மேலும் அறிவை விளைவிக்கும். கல்வி நல்வழிக்குப் பற்றுக்கோல். அறியாமை இருளைத் தொலைக்கும் அழிவிலாத தீபம். அஞ்ஞானப் பிணிக்கு மருந்து. ஆனதுபற்றி, கல்விப்பயிற்சியே மாந்தர்க்கு அவசியம் எனப் புலப்படும்.

3. கற்றற்குரிய காலம் இளமைப் பருவமாதலின் 'இளமையிற் கல்' என ஔவை மொழிந்தனள். கல்விகரையில்லாதது பற்றி முற்றுங்கற்க முயல்வது சாத்தியமன்று. நமது வாணாளும் போதாது. மெல்லக் கற்போமெனின், இல்வாழ்க்கைக் கவலையும் முதுமையும் பிணியும் இடையுற்று நெருங்கும். ஆதலால் தக்கபருவத்திலே கல்விப் பொருளைத் தேடிப்பெறுதல் வேண்டும்.

4. நூல்கள் பலவுளவாதலின் புன்கல்வி கற்றுப் பொழுது போக்காது நீரைப்பிரித்துப் பாலைப் பருகும் அன்னம்போல மதியை மயக்கி ஜன்மத்தைக் கெடுக்கும் வீணூல்களை யொழித்து இருமைப் பயன்களைப் பயக்கும் நூல்களைப் பயிலல் வேண்டும். தக்க ஆசிரியனை நாடி முறைவழுவாமலும் நெறிபிறழாமலும் சோம்பேறாமலும் சோர்வுறாம

ஆம் அவர் உள்ளமுவக்க ஒழுகிப் பயின்று தேர்ச்சி பெற்று நற்கேள்வி கேட்டுத் தெளிய வேண்டும். நூல்களைக் கற்றல் தொடங்குங்காலையில் துன்பத்தை விளைக்கினும், அதனைக்கைவிடாது விடாமுயற்சியைக் கைக்கொண்டு மேன்மேலும் பயிலல் வேண்டும். இம்முயற்சியால் உறும் பயனை நோக்கி நுனியிற் கரும்பு தின்றற்றே என்றார் புலவர். இக்கரைக்கு அக்கரை பச்சை யெனக் கருதுமாப்போல் வருந்தித் தாம் கற்றநூலை ஓம்பாது பிறிது நூலைக்கற்கப் புகுதல் நன்மதியன்று.

5. கற்றலிற் கேட்டலே நன்று. கேட்டலின் நன்னெறி பற்றுதலே நன்று என்பராதலின், நன்னூல்களைக் கற்றாய்ந்து நற்கேள்விகேட்டுத் தெளிந்து நல்லொழுக்கத்தைக் கைப்பற்றல்வேண்டும். கல்வியறிவால் நல்லொழுக்கமும் நல்லொழுக்கத்தால் யோக்கியதையும் யோக்கியதையால் நிலைபெற்ற பொருளும் பொருளால் தருமமும் அதனால் நற்பயனும் பிறத்தலால் ஓதியுணர்ந்து நல்லோரை நாடி நன்னெறியில் ஒழுகுவதே நன்முறையென்று ஆன்றோர் வகுத்தனர்.

6. உலகத்தில் மேலோர் கீழோர் போலவும் கீழோர் மேலோர் போலவும், மூடர் விவேகிகள் போலவும் விவேகிகள் மூடர் போலவும் தோன்றுவராதலால் நாம் மதிகெட்டுத் தடுமாறி மூடர் நேசத்தையும் கீழோர் பாசத்தையும் பற்றலாகாது. கரும்பு கணுக்களோடு கோணி இருக்கினும் தித்திக்குமேயன்றிக் கசக்காது. காஞ்சிரங்காய் நல்வடிவினதாய்ச் சிவந்து கனிந்திருக்கினும் கசக்குமேயன்றித் தித்திக்காது. அம்பு வளைவின்றி ஒழுங்காக விருப்பினும் உயிர் வதையே செய்யும். வீணை ஒழுங்கின்றி வளைந்திருப்பினும் இன்னோசையையே தரும். ஆதலால் காட்சிப்பிரமாணத்தால் நிச்சயிக்காமல் ஒருவரிடத்

துற்ற இயற்கையுஞ் செயற்கையுமான குணங்களைப் பகுத்தறிந்து சாதுக்கள் உரிமை பூண்டு ஒழுகல் வேண்டும்.

7. பெற்றோர் மனம் பூரிக்கச் செய்வன கல்விப் பயிற்சியும் நல்லொழுக்கமுமேயாம். கல்விக்கழகத்தில் சிறப்பைத் தருவனவும் அவையே. வேந்தர் அவையில் மேன்பாடு அளிப்பவையும் அவையே. இகபர சாதனங்களைப் பெறுதற்கு ஏதுவாயிருப்பனவும் அவையே. மனிதர்க்குக் கல்வியைவிட மேலான பொருள் இல்லை. கற்றோனுக்கு அரசனும் ஈடாகான். வேந்தனுக்குத் தன்னாட்டிற்றான் சிறப்பு. கற்றாய்ந்தோனுக்கு எந்நாடும் தன்னாடாகும். அவனுக்குச் சென்ற விடமெல்லாஞ் சிறப்பு. கல்வியறிவுடைமை நல்லொழுக்க முண்மையால் விளங்கும்.

8. 'பல கற்றோம் யாம் என்று தற்புகழவேண்டாம். அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும்.' சிற்றுளியால் பெருமலையும் தகரும். சில கற்றாரிடத்தும் கல்விப் பொருளைக் கசடறக் கற்றவர் மயங்கத்தக்க அறிவு விளங்குமாதலின் கல்விச் செருக்கடையலாகாது. தராசுக்கோலில் பாரமாயிருக்குந் தட்டு கீழே நிற்றல்போலக் கற்றறிந்தோர் பெருமை பாராட்டாது தணிந்தொழுகுவர்.

## 10. நற்போத விளக்கம்.

### 1. பொறுமையின் மகிமை.

பொறுமையின் புதல்வன் எனப் பெயர்படைத்த ஒருவரிடம் ஓர் மாணாக்கன் சென்று வந்தனம்புரிந்து அப்பெருமானை நோக்கி, "ஐயா, நீவிர் வெகுளிகொண்டதை யான் கண்டிலன். யாதுகாரணம் பற்றி, சினமேற்கொள்வதில்லை?

அதன் இரகசியத்தை அடியேனுக்கு அருளல்வேண்டும்," என்று பிரார்த்தித்தான். அதற்கு அவர் உள்ளங்கனிந்து தம்பால் கோபஞ் ஜனித்ததற்காகப் பின்னர் தாமே பலர் பச்சாத்தாபப்பட்டதை நான் அறிந்திருக்கிறேன். கோபங்கொள்ளாமல் மௌனஞ்சாதித்ததற்காகப் பின்னர் கிலேசமுற்றதையான் அறிந்திலன். பொறுமை பரமசாதகம் என்பதே நற்கொள்கை, என மொழிந்து மாணுக்கனுடைய சங்கையைப் போக்கினார்.

---

## 2. கோபம் நாசம்.

கோபத்தாற் பல தீமை விளையும். கோபம் பிறக்கின், மனக்கலக்கம் பிறக்கும். மனக்கலக்கம் உதிக்கின், அறிவு கேடுறும். அறிவுகெடின் அருள் குன்றும், அருள் குன்றின், தீச்செயல் விளையும். கோபம் பாவம். கோபம் நாசம். கோபம் முக மலர்ச்சியை யொழிக்கும். அகமழிச்சியைத் தொலைக்கும். கோபம் பிறக்கும்படி பிறர் கூறிய இழிவு நம்பால் உளதாயின், அவ்விழிவை விலக்குவதே முறை. அவ்விழிவு இலதாயின் பொய் நிலைபெறாது என்று நினைந்து அதனைப் பாராட்டாது சினங்கொள்ளாதிருத்தல் வேண்டும். வலியார்மாட்டுச் செய்யுங்கோபம் தனக்கே தீதாம். மெலியார் மேல் செய்யுங் கோபம் பாவமுமாம். சிற்றம் பிறக்குங்காலை, சற்று நிதானித்து யோசிக்கின், அது தணியும். 'கோபம் வருமிடத்து ஒன்று முதல் பத்து வரையில் எண்ணு. கோபம் குறையும். குன்றுவிடின் நூறு மட்டும் எண்ணு,' என்று ஒரு ஞானி சொல்லியிருக்கிறார்.

---

## 3. மனத்திருப்திக்குக் காரணம்.

"ஐயா, நீர் வறுமை யடைந்தும் எப்பொழுதும் மனத்திருப்தி யோடிருப்பதற்குற்ற நியாயம் யாது? என்று

விவேகி யொருவனை ஒருவன் வினவினுன். அதற்கு அவர், "அப்பா, அருமையிலும் அருமையான கேள்வி கேட்டாய். அதன் உண்மையை விளக்குகிறேன். அதனைச் செவியுற்றுக் கேள், எனது நிலைமை என் அவாவினுக்கு இணையாவிடின், எனது அவாவை என் நிலைமைக்கு இணையச் செய்வேன். இவ்வாறு இரண்டினையுங் கூட்டுறவாக்கின், மனத்திருப்தி உதிக்கும். வறுமையினுல் வருந்தும்போது மனத்திருப்தி யடையாதவன் செல்வம் ஓங்கும்போது மனத்திருப்தி யடையான். திருப்தியடையாதிருத்தல் மனக்குற்றமே யன்றிப் பொருட் குற்றமன்று. ஆசைக்களவில்லை யாதலின் கிடைப் பதைக்கொண்டு களிப்படையும் மனம் குறைவற்ற களஞ்சியமாம். போதுமென்ற மனமே பொன் விளை பூமியாம்: 'செல்வ மென்பது சிந்தையினிறைவே அல்லா நல்கு ரவவா வெனப்படுமே'" என்றுர் ஆன்றேர்.

### 4: கற்றறிந்தவன் அறிந்தது.

"தெவரீர் கற்றுய்ந்த பலவற்றுள்ளும் மயக்கமற உமக்கு விளங்குவது எது?" என்று ஒருவன் கல்விப் பொருளைக் கசடறக் கற்ற ஒருவரை வினவினுன். அதற்கவர் புன்சிரிப்புக்கொண்டு, "அப்பா, கற்றது கைம்மண்ணளவு கல்லாது லகளவு என ஔவை இயம்பிய வண்ணம் யான் கற்றுக் கொண்டது அற்பத்திலும் அற்பம் என வெளிப்படையாய்த் துலங்குகின்றது. யான் ஐயமறத் தெளிந்துகொண்டதென்னவெனின் யான் அறிந்தது மிகவும் அற்பம் என்பதேயாம் என விடை பகர்ந்தனர். கல்விக்குக் கரையில்லை யென்பராதலின், முற்று முணர்ந்தவர் இல்லை. ஆனதுப்பற்றிக் கற்றுணர்ந்தோமென்று கல்விச் செருக்கடையலாகாது.

### 5. பொய் மோசம்.

உள்ளதை இல்லது என்றும் இல்லதை உள்ளதென்றும் மொழிவது பொய். பொய் பாவச்செயலுக்குத் தாய்;

மோசத்துக்குத் துணைக்கருவி; நாசத்துக்கு வேர்; எவ்வகைப் பாவத்துக்கும் வித்து. பொய் வஞ்சகத்தின் வளர்ப்பு. பொய் திருட்டின் கண்மணி, நரகத்தின் நூலேணி. ஆனது பற்றியே பொய் சொல்லலாகாது. ஒரு பொய் உரைக்கின், சொன்னதை உறுதிப்படுத்தப் பலபொய் சொல்ல நேரும். பொய்யன் மெய்யைச்சொன்னாலும் எவரும் நம்பார். பொய் ஒன்றை ஒழிக்கின், அது வழியே பாவச்செய்கை அனைத்தும் ஒழிந்துபோம். பொய் மொழியாதிருத்தல் இருவகைப் பொருளினும் மேலானது, பொய்யே கொல்லும் மெய்யே வெல்லும் என்பது ஒரு பழமொழி. எத்தேயத்தாரும் எவ்வருணத்தாரும் எக்காலத்திலும் பொய்யைத் தள்ளி-மெய்யைக் கைக்கொள்ளுதல் நற்கருமமாகும். முன்னோர் வேந்தன் பொய் மொழியாதிருந்தது பற்றிச் சத்திய வாக்கு அரிச்சந்திரன் என்னும் திருநாமம் சூட்டப்பெற்றான்.

## 6. கொலை நரகம்.

1. தருமம் அனைத்திற்கும் பிரதானம் விரதம். விரதங்களுள் சிறந்தது கொல்லாவிரதம். இதுதான் தருமங்களுக்குத் தலையாகும். கொலைப்பாதகம் நான்குவழியால் விளையும். மனத்தால் நினைத்தாலும் வாக்கால் உரைத்தாலும் தேக உறுப்பால் நடத்தினாலும் கொலைப்பாதகம் வந்தடையும். மனம் வாக்குக் காயம் இவற்றால் விளைவது இதுதான். பிறிதொரு வகையிலும் இப்பாதகம் நேரும். விலைக்கு மாமிசத்தைப் பெற்றாலும் பாவந்தான்.

2. பகுத்தறிவு உள்ள மனிதன், மன்னுயிரைத் தன்னுயிர் போல் பாவியாமல், தன்னுயிரை வல்லுயிரென்றும் மன்னுயிரைப்புல்லுயிரென்றும் நினைந்து உயிர்வதை செய்தல் அடுக்குமா? ஜீவகாருண்ணியத்தை ஒழித்து ஜீவவதையைத் தேடல் வாயினின்றும் அமிர்தத்தை உமிழ்ந்து விஷத்

தை உட்கொண்டது போலாகும். ஜீவ நேசம் நற்கதிபெற நல்லேணியாகும். ஜீவ நாசம் மாளாத் துன்பத்தை விளைத்து மீளா நரகத்திற்கு நாணுமற் சேர எதிர்கொண்டழைக்கும். நோன்பென்பது கொன்று தின்னுமை என்பதால் இக் கருத்து நன்கு விளங்கும்.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

## 7. சாதித்தற்கு அரிது எது? சாதித்தற்கு எளிது எது?

ஒருகால் வித்தியார்த்திகள் சிலர் கூடிச் சம்பாஷித்து வருகையில் "சாதித்தற்கு அரிது எது? சாதித்தற்கு எளிது எது?" என்னும் பிரஸ்னம் பிறந்தது. வினவுக்கு ஏற்ற விடை அளிப்பவர் அங்கு இல்லாமை பற்றி, அறிவில் பிரகஸ்பதி அம்சமாகப் பாவித்துத் தாங்கள் போற்றிவரும் குரு ஆச்சிரமம் சென்றார்கள். சீஷர்கள் குரு சந்நிதானம் சென்று இருகரத்தையும் சிரமேற்கூப்பி, தீர்க்க தண்டமிட்டு, அடிவணங்கித் தொழுது, கைகட்டி வாய்புதைத்து, உள்ளும் புறமும் ஒருவழிப்பட்டுச் சற்குருவை நோக்கி, "ஆண்டவரே, சாதித்தற்கரிதெது? சாதித்தற்கெளிதெது? என்பதை விளக்கி எங்கட்கு நல்லறிவு புகட்டி யாங்கள் உய்யும் வழிகாட்டவேண்டும்," என்று பிரார்த்தித்தார்கள். அந் நற்போதகர் முகமலர்ந்து அகமகிழ்ந்து கருணைக்கண் விழித்துப் பார்த்து, "நீவிர் வினவியது அருமையிலும் அருமையானது. ஊக்கமும் அவாவும் உள்ளோர்க்கு எதுவும் எளிது. அவை யில்லோர்க்கு எதுவும் அரிது," என மொழிந்தார். சீஷர்கள் மயக்கந்தெளிந்து குரு அருளிய இரகசியத்தைத் தலைமேற்கொண்டு திரும்பினார்கள்.

### 8. தானம்.

தானங்களுள் சிறந்தது சுவர்ண தானம். அதனினும் சிறந்தது கன்னிகாதானம். அதனினும் சிறந்தது நல்லன்பர்கட்கு இன்பமாய் அன்னதானம் செய்தல். அதனினும் சிறந்தது தண்ணீர்ப்பந்தல் வைத்து உபசரித்தல். அதனினும் சிறந்தது வித்தியா தானம். அதனினும் சிறந்தது சற்பாத்திரம் அறிந்து ஈவது. அதனினும் மேலானது பூதானம். அதனினும் மேலானது கோதானம். அதனினும் மேலானது விருந்தோம்பல். அதனினும் மேலானது குறிப்பறிந்து ஈதல். அதனினும் மேலானது கற்றோர்க்கு அளித்தல். அதனினும் மேலானது ஏழைக்கு இரங்குதல். அதனினும் மேலானது கூலி குறையாதிருத்தல். அதனினும் மேலானது குடும்பத்தைச் சவரட்சித்தல். அதனினும் மேலானது சத்திய நெறியில் நிற்றல். எல்லாவற்றுள்ளும் மேலானது பெற்றோரைப் பேணல்.

## 11. தீமை மறத்தல் பெரியோர் தன்மை.

1. பூசநகரம் என்னும் பட்டினத்தில் பரமதத்தன் என்னும் வேந்தன் மநுநீதி தவறாமல் செங்கோல் செலுத்தி வந்தான். நீங்காத தருமமும் குன்றாத வாழ்வும் குறையாத செல்வமும் அவன் ஆளுகையில் ஓங்கி நின்றன. அக்கோமான் சகல குண சம்பன்னனாயிருந்ததுபற்றி, பிரஜைகள் அனைவரும் நமது மன்னன் வித்தையில் அகத்தியனோ, அறிவில் ஆதிசேடனோ, ஆண்மையில் விக்கிரமாதித்தனோ, சாந்தத்தில் யுதிஷ்டிரனோ, வாய்மையில் அரிச்சந்திரனோ, நீதியில் மனுசசக்கரவர்த்தியோ, பொறையில் இராமபிரானோ, உதாரத்தில் கர்ணனோ என்று உள்ளம் பூரித்து

போற்றுவார்கள். "அவன் ஆணையில் பசுவும் புலியும் ஓர் பாறையில் படுத்தன. பாம்புங் கீரியும் பிரீதியாய் அடுத்தன. கிளியும் பூனையும் கிட்டிவிளையாடின. சிங்கமும் கரியும் சேர்ந்துறவாடின, ஒந்தியும் மயிலும் கூடி உலாவித் திரிந்தன. பருந்துங் கோழியும் கலந்து விளையாடின. மானும் புலியும் மகிழ்ந்து குலாவின. பூனையும் எலியும் பூச்செண்டாடின," என்று கவிவாணர் அவன் கீர்த்தியை எடுத்துரைப்பர்.

2. அக்கோமகனிடத்தில் பறவைச்சாரி என்னும் ஒருபட்சி பேதமின்றி நேசங்கொண்டு நாடோறும் சென்று சம்பாஷித்துப்போவது வழக்கம். அப்புள்ளானது அரசனைத் தகுந்த சிநேக பாத்திரம் எனச் சிந்தையுட்கொண்டு, ஒருநாள் தனது பார்ப்பை இறைவனிடம் விட்டுத் தான் இரைதேடப் போயிற்று. மகிபதியும் மனமுவந்து அதனையெடுத்து மார்போடணைத்து மூத்தமிட்டுக் கொஞ்சிக் குலாவி அன்பு பாராட்டித் தன் புத்திரரிடம் ஒப்புவித்துப் பத்திரமாய்ப் பாதுகாத்துவரக் கட்டளையிட்டான். அண்ணல் மக்கள் அதைப் பரிகாசம் பண்ணிக் கைமேலெடுத்துத் தரையிலடிக்க அப்புள் மாண்டது. இதனைக் கண்ணுற்ற காவலன் உடல்பதறி உள்ளம் நொந்து ஒன்றுந் தோன்றாமல் ஒடுங்கியிருந்தான்.

3. பறவைச்சாரி திரும்பிவந்து நண்ணிய விடத்தில் கண்ணிய பொருளை எண்ணிய முறைப்படி காணாமல் இறந்த குழந்தையைக் கண்டு எண்ணி யெண்ணி மண்ணும் விண்ணும் கலங்கும்படி அழுது கண்ணீர் சொரிந்து கதறிற்று

"ஐயோ, தன்னிலும் உயர்வடைந்துள்ள தனவான் கேண்மை ஆபத்துக்கிடம் என்னும் ஆன்றோர்மாற்றம் அனுபவத்தில் உற்றது. ஆதுலன் இல்லம் சீமான் விஜயஞ் செய்

தால் சோடச உபசாரம் நடக்கும். அவ்வாதுலனே ஸ்ரீமான் கிரகம் செல்வானுகில், அப்பெருமான் தன் பணிவிடையாளரைக்கொண்டு விசாரிக்கச் சொல்வான். இக்கோமான் தன் மக்களிடத்துற்ற வாஞ்சையால் சுந்தரமுள்ள நமது அருமந்த மகவுக்கு உயிர்ச்சேதம் வருவித்து என்னை அந்தரத்தில் நிறுத்தினுன் என்று சிந்தாகுல மடைந்தது. பின்னர் கோபத்தீ பற்றியெரியக் கண்கள் சிவந்து பெருமூச்செறிந்து வெறுப்பும் ஆயாசமும் கொண்டது.

4. "ஓ பூபதியே, சேனை முதலிய ஜனக்கட்டும் பாக்கியம் முதலிய பணக்கட்டும் உள்ளன என்னும் மமதை ஏறி செய்காரியம் தவிர் காரியம் தெளியாது சிந்தை களித்தனை. நற்றருமத்தை யொழித்துத் துர்க்கருமத்தை நடத்த இடந் தந்தனை. மித்திரன் என நின்னை நினைந்து என் புத்திரனை விட்டுப்போனது கேசரியிடம் வேசரி அபயந்தேடிய வண்ணமாயிற்று. தொண்டு பூண்டவர்மீது தண்டம் பிரயோகித்தவாறு தஞ்ச மடைந்தவர்க்கு வஞ்சம் புரிந்தாய். தெண்ணீர் ஏற்கப் புண்ணீர் அளித்தாய். இறப்பினுலன்றி மறப்பரியவெங்கண் விளைத்தாய். உன் பேறு உனக்கு முன்னிருந்தவர் அனுபவித்ததுதானே. அவர்கள் கதி இப்பொழுது என்ன? சரணம் அடைந்தவரைத் திரணமென்றெண்ணி மரணம் வரக் கண்டு களித்தாய். நின் நன்னடத்தை நன்மொழியை நம்பி மதிமயங்கி மோசம் போனேன். என் குலத்தின் குழவியை யிழந்தேன். இறைவன் நேசமும் பாம்பின் பாசமும் மோசத்துக்கு இடமாய் நாசத்தை விளைவிக்கும் என்பதை அறியாமற்போனேன். விடுவேனே? பழிக்குப் பழிவாங்கி உன்னையும் உன் ஆட்சியையும் அதமாக்குகிறேன்," என்று பறவைச்சாதி மொழிந்தது.

5. இம்மாற்றம் செவியிலேறப்பெற்று அரசன், 'ஓ புள்ளரசே! சினங்கொள்ள வேண்டாம்: துஷ்ட நிக்கிரகம் சிஷ்

பரிபாலனம் செய்வது எனது கடமை. உமது பார்ப்புக்கு இன்னமை விளைத்தவன் அறியாச் சிறுபுதல்வன். என்முன்னே நீர் அபராதியைப் பிடித்து முறித்து உமது பழியைத் தீர்த்துக்கொள்ளும். கற்றறிவால் நிறைந்த உத்தம குணம் பெற்ற ஆன்றோர் தமக்குத் தெரியாதொருவன் இடுக்கண் விளைக்கின், அவர்கள் அதை மறந்து மன்னிப்பார்கள். மத்திமர்க்கு இன்னமை விளைப்பித்தால், அவர்கள் அதற்குப் பிரதிபண்ணிக் காட்டுவார்கள். அதமர்க்குத் தீங்கு புரிந்தால், அவர்கள் அதை ஒன்று கோடியாய்ப் பெருக்கி என்றைக்கும் இடையூறு செய்வார்கள். ஓ பட்சிராஜனே, நீர் வெகுளி மேற்கொள்வது தர்மம் அன்று!' என நவின்றான். அதற்கு அப்பட்சி, ஓ நராதிபதி! நீ கூறும் தர்மம் புத்திர சோககாலத்தில் பயன்படாது. இத்துக்கம் உலகவாழ்க்கை பொய்யென்று ஒழித்த கடந்த ஞானியையும் கலங்கச் செய்யும். நீ வல்லவனென்றும் நீதிமானென்றும் புத்திமாறி மித்திரபாவங் கொண்டேன். வேந்தன்முறையை யொழித்து வேடன்கோலங் கொண்டாய். உன்னையும் உன்னாட்டையும் விடேன்,' என்றிறுத்தது.

6. புறவலன், 'ஓ பட்சிக்கிறைவனே! நியாயமும் நீதியும் எவர்க்கும் பொது. இவை மாறுபடா. உமது குலத்தின் குழவியைச் சிதைத்த என் சிறுவனை உமக்கு நேரே விடுகிறேன். அவனை உமது இரக்கையினால் அடித்து நகத்தினாற் பிளந்து மூக்கினாற் கொத்திப் பத்தலாய்க் கிழித்துப் பழிக்குப்பழி வாங்கிப்போடும். உமது புத்திர சோகந் தீரச் சித்திரவதை செய்யும். அது எனக்குச் சம்மதம். அதுவே அரசநீதி,' என்று இதமாய்த் தாழ்மையாய்க் குளிர்ந்த மொழியோடும்கூறி வருந்தினான். இதைக்கேட்ட அப்பறவைச் சாரி சீற்றந் தணிந்து உள்ளமிரங்கி, ஓ மன்ன! என்பிள்ளையைக் கொன்றதற்குப் பதிலாக உமது பிள்ளையைக் கொல்

லச்சொன்னீர். அப்படியே உயிர்வதைசெய்வேனாகில் மாண்டுபோன என்பிள்ளை மீண்டுவருமா? இறந்துபோன என் பிள்ளை எழுந்து வருமா? கொழுந்து விட்டெரிகின்ற என் குடல் குளிருமா? ஒன்றுதான் மாண்டது. வினை தொலைந்தது. இன்னொன்றும் ஏன் மடியவேண்டும்? நீர் சத்தியந்தப்பாமல் தருமவழியே நின்று என்னை அற்பப் பட்சியென்றிகழாமல், உமது பிள்ளையென்கிற வாஞ்சையைப் பாராட்டாமல் பேசினீர். நடுவு நிலைமையை நாடினீர். சத்தியத்தை அனுசரித்தீர். இதுவே எனக்குப்போதும். உமது மனதில் களங்கமில்லை. உமது நோன்மையும், பாண்மையும், மேன்மையும் நன்றுபுலப்பட்டன. 'ஆல் போற்றழைத்து அறுகு போல் வேரோடி மூங்கில் போல் தழுவி முடிவின்றி வாழும்,' என்று வகுத்து இறந்துபோன தன் மகவை எடுத்துக்கொண்டு தன்னிடம் சென்றது. தன்னினும் மிகுந்த செல்வருடன் ஆய்ந்து நேசம் பண்ணவேண்டும்.

### கற்கவேண்டுவன.

தீமை மறத்தல் மேலோர் தன்மை.
துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரிபாலனம் பண்ணுதல் அரசநீதி.
இரக்கமும் நற்குணமும் எப்பொருளுக்கும் உண்டு.
பிறர் செய்த நன்றியை மறவாதவர் நன்றிசெய்தவரினும் நல்லவர்.

## 12. முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்.

1. இம்முதுரை எத்தேயத்திலும் எத்திறத்தாராலும் வழங்கும் பான்மையையுடையது. குல நலமும் ஆக்கப் பெருக்கமும் ஒருவர்க்கு வாய்ப்பினும் நன்முயற்சியின்றி அவர் மேன்பாடு அடைதல் அரிது. எக்குலத்து

திக்கினும் நல்லொழுக்கம்பற்றி நற்குணம்பூண்டு விடா முயற்சியைக் கடைப்பிடித்து நன்மையை மானிடர்க்குப் புரிவரெவரோ அவர் புகழுடம்பை உலகத்தில் நிலைபெறு வர். உயர்குலத்தோனும் செல்வம்பெற்றோனும் உலோ கோபகாரமாய் ஒரு செய்கை புரியின் அச்செய்கை சிறப் பேயாகும். அத்தன்மைய செய்கையைத் தாழ்ந்த குலத் தோனும் வறிஞனும் ஊக்கத்தாலும் தளரா முயற்சியா லும் செய்வானெனின், அது சிறப்பினும் சிறப்பெனக் கொள்ளப்படும். கள்ளியினிடத்து நறுமண மிகுந்த அகில் பிறக்கவில்லையா? விலங்கின் வயிற்றில் பிணிதீர்க்கும் கஸ் தூரி உற்பவிக்கவில்லையா? சேற்றில் பூஜைக்கேற்ற செங் கழுநீர் பூக்கவில்லையா? நத்தை வயிற்றில் விலைபெற்ற முத்துப் பிறக்கவில்லையா? குணத்தைப் பெரிதெனக்கொ ள்வது முறையே யன்றிக் குலத்தைச் சுட்டிக் குறைகூற லாகாது. நல்கூர்ந்தாரெனினும் குலப் பெருமையில்லாரெ னினும் பொதுநன்மையை விருதாகக் கொண்டுச் சுய லாபத்தை மதியாமலும் தேகசுகத்தைப் பாராட்டாமலும் பாடுபடும் உத்தமரைக் கைகூப்பி உலகம் போற்றும் என் பது திண்ணம்.

2. 'புதுவுலகம்' எனப்பெயர் வழங்கும் பாதாளலோ கமாகிய அமெரிக்காவைக் கண்டுபிடித்து இப்பூகோளத்தின் இருபுறத்திற்கும் போக்குவரவுக் கேற்ற மார்க்கத்தை ஏற் படுத்தினவன் மேற்றிசைக்கண்டவாசியான ஏழைக் கொ லம்பஸ் எனச் சரித்திரம் முறையிடவில்லையா? மான் வேகத்திற்கிணையென விரைந்து சென்று இருப்புக்குதிரை யெனப் பெயர்படைத்து உயர்ந்த பருவதமோ தாழ்ந்த பள்ளத்தாக்கோ அடர்ந்த காடோ விரிந்த பாலைவனமோ நிறைந்த நதியோ என்று மதியாமல் நாடுநகரமெல்லாம் ஊடுருவிச் செல்லும் இருப்புப் பாதையின் முகிமையை

உலகத்துக்கு வெளிப்படுத்தினவன் நிலக்கரிச் சுரங்கத்தில் கூலிவேலையில் அமர்ந்தவன் புத்திரன் ஜியார்ஜ் ஸ்டீவன்சன் அன்றோ? காலாகாலங்களில் மானிடர் கற்கும் அறிவு அழியாமல் உலகுள்ளமட்டும் நிலைநிற்கவும் ஓர் தேயத்தார் ஆய்ந்து தெளியும் சாஸ்திர நுட்பங்களையும் மதாசார குலாசார நடையுடை பாவனைகளையும் பிறநாட்டார் இலகுவில் உணர்ந்து மகிழவும் உதவும் அச்சியந்திரத்தின் இரகசியத்தைக்கண்டு இங்கிலாந்துத்துக்கு அளித்தவன், வில்லிம் காகஸ்டன் என்று கற்றோரெவர்க்குந் தெரிந்ததன்றோ? ஒரு நாட்டார் கருத்தையும் இராச்சிய பரிபாலன முறையையும் வியாபாரத்தின் நிலையையும் பிறநாட்டார் அப்போதைக்கப்போது அறிந்து சுகிக்கவும் வாணிபம் தழைத்தோங்கவும் இறைமுறை சீர்பெறவும் நன்குதவும் மின்சார சக்தியை உய்த்துணர்ந்து புலப்படுத்தி உலகப் பிரதிஷ்டைபெற்றவன் ஏழைக்கொல்லன் புத்திரன் பாரடோயல்லவா? இப்பரதக் கண்டத்தின்மேற்றிசையிலுள்ள பம்பாய் இராஜதானியில் அநேக வைத்தியசாலை பாடசாலை முதலியனவற்றை ஏற்படுத்தி அவை தாழ்வுறாவண்ணம் மூலதனம் அளித்தும் பொதுநன்மைக்கு நன்கொடை பல ஈந்தும் நாடெங்கும் போற்ற நற்புகழ்படைத்து தேசாதிபதியால் பெரும்பட்டம் பெற்றவன் பூர்வத்தில் இரண்டு வெறுங் குப்பிகளைக்கொண்டு வாணிபம்புரிய ஏற்பட்ட ஜேம்ஸெட்ஜி ஜெஜீபாய் அன்றோ? கவிவாணர்பாடும் கீர்த்தனங்களையும் வித்துவான்கள் செய்யும் உபந்நியாசங்களையும் மதாபிமானிகள் செய்யும் பிரசங்கங்களையும் இயம்பியவாறே தனக்கு வாய், தொண்டை, நா, இன்றி மொழியும் போனகிராப் என்னும் பேசும் இயந்திரத்தை யமைத்து சாஸ்திரிகர் மெச்சும் நிபுணரும் கனவிலும் நினைந்திரா அற்புத அதிசயத்தை விளக்கி உலகுக்கு ஈந்தவன் பூர்

வத்தில் அமெரிக்காவில் பத்திரிகைவிற்று காலந்தள்ளிவந்த ஈடிஸன் என்பது எல்லோர்க்கும் தெரிந்ததுதானே.

3. இத்தன்மைய பெரியோர்கள் புரிந்த அருஞ்செயல்கள் நினைத்தமாத்திரத்தில் சாதித்ததன்று. ஒரே தாண்டில் ஊர்போய்ச் சேரமுடியுமா? கல்மேல் கல்வைத்து மாளிகை அமைக்கவேண்டியதேயன்றித் திடீரென்று நிர்மாணிக்கமாகுமா? மெல்ல மெல்லப் பாயும் நீர் கல்லுருவப்பாயும். அதுபோல மேற்கூறிய உத்தமர் தமது கருத்திற்கொண்ட கருமத்தை நாளாவர்த்தியில்

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்.

என்றவாறு. மனந்தளராமலும் சோர்வுறாமலும் முயற்சி குன்றாமலும், நெற்றிவேர்வை நிலத்தில்விழப் பாடுபட்டு இடையில் உற்ற இடுக்கண் அனைத்தையும் நிவர்த்தித்து கைக்கொண்ட காரியத்தைச் சாதித்தார்கள்.

4. எவ்வகைக் கருமமும் முற்றுப்பெறச் செய்தற்கு விடாமுயற்சியும் பொறுமையும் முக்கிய கருவிகளாம். அவை இரண்டும் இணைபிரியாத் தோழர். இவற்றுடன் உண்மைநெறியில் நிற்றலும் அவசியம். உண்மையற்ற வேலை நன்மையற்ற வேலை. உண்மையற்ற முயற்சி தின்மையுற்ற முயற்சி. முயற்சியில்லாப் பொறுமையும் பொறுமையில்லா முயற்சியும் பயன்படாவாம். பாடின்றிப் பலன்பெறுவதில்லையாதலின், நாம் உண்மை நெறியில் நின்று ஓயா முயற்சியோடும் பொறுமையோடும் நன்மை கடைப்பிடித்து பாடுபடவேண்டும். அவ்வகைத் துறையில் பாடுபடின் நாம் கைக்கொண்ட கருமம் முற்றுப்பெறும் என்பது நிச்சயம்.

## 13. மனோதைரியம்.

1. ஒரு நகரத்தின் ஒரு பகுதியில் ஓர் சீமான் வசித்தான். அவன் குலநலமுள்ள சீலன். நற்குணம் பூண்டு நன்னிலைபற்றி இல்லறவொழுக்கத்தை வழுவாது நடத்தி வருபவன். மன்னுயிரைத் தன்னுயிர்போல் பாவிப்பவன். ஏற்பவர்க்கு இல்லையென்னுமல் இரங்குபவன். கடவுள் அடியார்க்கு அடியனாய்த் துணை நிற்பவன். இடம் பொருள் ஏவல் வாய்த்தவன். ஆக்கப்பெருக்கும் மக்கட்பேறும் பொருந்தினவன். சீலத்தில் மிக்கோன் என அவன் கீர்த்தி எட்டுத்திக்கும் எட்டி அத்தலத்துக்கு நடுநாயகம்போல் விளங்கிவந்தான்.

2. திரண்ட பொருளையும் விலைபெற்ற பணியையுங் மண்ணிலத்துள் சேமித்து வைத்திருப்பதாக அவனைப்பற்றிப் புகல்வது உண்டு. அப்பெருமான் நெடுநாள் பிணியால் வருந்தி எழுந்து நடமாடக்கூட இயலாதிருந்தான். உதாரகுணமும் பொறையும் அணிகலமாகப் பெற்ற இப்பூமானுக்குச் சில விரோதிகள் இருந்தனர். அவர்களோ உலோபமும் பொறாமையும் உருவாய் அமைந்த படுபாவிகள். கன்னெஞ்சுள்ள வஞ்சகர். இத்துரோகிகள் அச்சீமான் பொருளைக் கைப்பற்றுவதற்குத் தக்க அற்றம் உற்றதெனக் கருதி தீத்தொழில் புரிய சாப்பனை செய்து நடுநிசியில் புறப்பட்டார்கள். அதுவோ நள்ளிருள் பரவி ஊரெல்லாம் அடங்கி ஓய்ந்திருக்கும் வேளை. சோரரும் கொலைபாதகரும் கள்வருமன்றி மானிடரும் விலங்கினமும் மெய்மறந்து அயர்ந்து நித்திரை செய்யுங் காலம். இத்தன்மைய தருணத்தில் அப்பொல்லாப் புரையர்கள் தனவந்தன் இல்லஞ் சென்று வாசற் கதவைக் கோடரியால் பிளக்கலானார்கள். இவ்வரவம் உள்ளிருந்த சீமானின் வாழ்க்கைத் துணைவி

யின் செவிக்கு எட்டியது. அக்கோஷத்தைத் திடுக்கிட்டுப் பயந்து நடுநடுங்கி மனந்தளர்ந்து தேகமெல்லாம் வியர்த்துத் திகைத்து நின்றாள். அப்பெண்மணியோ நகமுஞ் சதையும்போல அந்நற்குண பாங்கனுக்கு மாறா உரிமை பூண்ட பிராண நாயகி. சற்றுச் சென்ற பின்னர் அக்கோமாட்டி தன் நாயகன் உயிரையும் உடமையையும் காப்பாற்றுவதற்கேற்ற உபாயம் ஒன்று தேட நினைந்தாள்.

3. "நமது கணவன் பொருளைக் கவரக் கருதி இக்சயவர் இங்கு வரலாயினர். இதிற் சற்றேனும் ஐயமில்லை. நமது கொழுநன் திடனற்றவன். நானோ பெண்பிறப்பு. நண்ணலரோ நமனினும் கொடியர். திருட்டுத் தொழில் புரியும் மூர்க்கர். கருங்கல் உருகினும் உருகும். கள்வர் மனம் இளகாது. ஈவு இரக்கம் பச்சாத்தாபம் அவர்களிடத்தில் கனவிலும் நனவிலும் பிறவா. ஒருகால் என் காதலனுக்கு உயிர்ச்சேதம் விளைவிப்பர்போலும். இத்துஷ்டரோடு எதிர்க்க என்னால் முற்றாது. கருதலன் பலவானாயிருந்தால் அவனுக்கு நயங்காட்டி நடித்து உபாயத்தால் நம்மை விடுவித்துக்கொள்ளவேண்டும். சோரர் முன்னிலையில் மெய் முன்னுக்கு வராது. மந்திரமாயினும் தந்திரம் வேண்டுமாதலால் பொய்யாகிய ஒரு போக்கைக் காட்டுவதே உசிதம்" என்று அத்தலைவி வழிபடு கடவுளைச் சிந்தனைசெய்து வந்தனை புரிந்து 'இவ்வமயத்தில் ஓர் மார்க்கம் கற்பிக்கவேண்டும்' எனப் போற்றினாள்.

4. நல்லோர் நாசமுறுவதோடு சகிக்குமா? தெய்வம் பொறுக்குமா? அவள் உள்ளத்திற் கேற்ப மனோ தைரியம் உதித்தது. உடனே அவள் தன் தலைவன் பள்ளியறைக்குட் புகுந்து அவன் துயிற்றலைப் புலப்படா வண்ணம் மூடிவிட்டுப் பிறகு தன் காவலனுடைய ஆடையைத் தான் தரித்துக்

கொண்டு ஆடவர் வேடம் பூண்டு காவிரிடஞ் சென்றாள். அருகுற்று 'எங்கள் புதைய லறையைக் காட்டிவிடுகிறேன். என்னைப் பிடிக்கவேண்டாம்' என்று அவள் வேண்ட, 'புதையலைக் காட்டிவிடு' என்று அவர்கள் அதட்டி வெருட்டி அம்மாதைப் பின்பற்றினார்கள். 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் புதைப் பிருப்பிடம் நமக்கு வலியத் தெரியவருகிறது' என்று சோர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

5. சிமாட்டி கண்டு பாராட்டி அவர்களை யிட்டுக்கொண்டுபோய் ஒரு சிற்றில்லுட் புகுந்தாள். ஆங்கு விரித்திருந்த இரத்தின கம்பளம் ஒன்றை அவள் தூக்கி அதனடியில் தரையோடு தரையாய்ப் பூட்டப்பட்டிருந்த ஒரு இருப்புக் கதவைக் காட்டி அதைத் தூக்கி நிமிர்த்தும்படி அவர்களை வேண்டினாள். அதற்கிணங்கி அவர்கள் அக்கபாடத்தைத் திறக்கலுற்றார்கள். அதற்குத் தாழவமைந்த சிலாதலப்படி வழியாய்ச் செல்வி முன்னே செல்ல கள்வரும் ஏற்றிய வர்த்திகளுடன் அச்செல்வியைப் பின்றொடர்ந்தார்கள். அந்நில வறையில் அநேகம் இருப்புப் பெட்டிகள் பூட்டப்பட்டிருந்தன. தங்கள் நிதியும் பணியும் அவற்றுள் அடக்கம் எனச் சீமாட்டி புகன்றாள்.

6. தாங்கள் சிந்தித்தவாறு தொடுத்த கருமத்தை அடுத்துமுடிக்கத் 'திறவுகோல் எங்கே?' என்று அவர்கள் வினவ, 'இதோ ஒரு நொடியில் கொணர்ந்து தருகிறேன்,' என்று அந்நங்கை மான்வேகத்திலும் அதிவேகமாக விரைந்து ஓடினாள். அக்கணத்தில் அத்தருக்கர்தம் சிற்றறிவாண்மைக்கு அளவு உண்டோ? "இந்நாள் நன்னாள். நாம் வெளிப்பட்டகாலம் களிப்புறு காலம். எள்ளளவு இடையூறும் இன்றி இத்தனிகன் ஆக்கம் அனைத்தும் நமக்கு வாய்த்தது. தன

க்கு மரணம் உறத்தருணம் நேர்ந்ததென்று அஞ்சியன்றோ தனயன் புதையலறையைக் காட்டிவிட்டான்' எனச் சிந்தித்து அவர்கள் முகமலர்ந்து அகமகிழும்போது 'பட்' என்றொரு சத்தம் 'சட்' டென்று அவர்கள் செவிக்கு எட்டியது. அது என்ன சத்தம்? அது எங்கிருந்து பிறந்தது? என்று கள்வர் நோக்குங்காலை தாங்கள் தூக்கி நிறுத்திய கதவு சார்த்தப்பட்டதென்றும் வெளிப்பக்கத்தில் பூட்டப்பட்டதென்றும் தெரிந்துகொண்டார்கள்.

7. கருடன் கையிற் சிக்கிய சர்ப்பம்போலும் அரிகர்ச்சனை கேட்ட யானைபோலும் பாம்பு வாயில் அகப்பட்ட தேரைபோலும் சோரர்கள் ஆவி தடுமாறி செயல் மறந்து தியக்கங்கொண்டு தவித்தார்கள். 'ஐயோ, வாயசத்துக்குப் பாயசம் கிட்டுமோ? நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்ததே. தன் வினை தன்னைச் சுட்டதே. ஆழந் தெரியாமற் காலிட்டுக்கொண்டோமே. ஓடி யொளிக்க வழியில்லையே. நமது புத்திக்கு மோசம் வந்ததே. பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்பது மெய்யாயிற்றே. நமது தெருட்சி யனைத்தும் மருட்சியாக முடிந்ததே. கதவண்டை காவல் வைக்காமல் வந்தோமே' என்று காவடர் புலம்பி மெய் சோர்ந்து நாவுலர்ந்து நாபி வறண்டு கருத்தும் அயர்ந்து மேல் மூச்சு விட்டுத் தவித்தார்கள்.

8. அம்மங்கை கதவைச் சார்த்திப் பூட்டின பிறகு தன் பணிவிடையாளரையும் கிளைஞரையும் எழுப்பி உற்ற செய்தி விளக்கி அவர்களை யிட்டுக்கொண்டு வந்தாள். புரையோர் அனைவரையும் பின்கட்டாகக் கட்டி அகம் விட்டுப் பெயர்த்துத் தொழுவில் அடைத்தார்கள். பகலவன் கீழ்த்திசையில் எழ அம்மாது தர்மாலயம் சென்று நிகழ்ந்த வர்த்த

மானங்களைத் தெரிவிக்க, அவர் செவிகுளிரக் கேட்டு மன மகிழ்ந்து, திருடர்களைக் கடுஞ்சிறையில் விடுத்துப் பெண் மணியின் ஊக்கத்தை மெச்சினர். சீமானும் மனமுவந்தான்.

### கற்கவேண்டுவன.

கண்ணுக்கு அழகு தீயோரைப் பாராதிருத்தல்.
காதுக்கு அழகு புறங்கூறுதலைக் கேளாதிருத்தல்.
வாய்க்கு அழகு நிந்தியாதிருத்தல்.
மனதுக்கு அழகு பிறர்க்குக் கேடு நினையாதிருத்தல்.
காலுக்கு அழகு இரக்கப் போகாதிருத்தல்.
கைக்கு அழகு பிறர் பொருளைக் கைப்பற்றாதிருத்தல்.

# திரிகடுகம்.

தன்குணங் குன்றாத் தகைமையுந் தாவில்சீர்
இன்துணைத்தா ரேவின செய்தலும்—நன்குணர்வின்
நான்மறை யாளர் வழிச்செலவு மிம்மூன்றும்
மேன்முறை யாளர் தொழில். 1

தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்
வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணாதான்
கோளாள னென்பான் மறவாதா னிம்மூவர்
கேளாக வாழ்த லினிது. 2

வருவாயுட் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை எய்தப்
பலநாடி நல்லவை கற்றலிம் மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள். 3

உண்பொழுது நீராடி யுண்டலு மென்பெறினும்
பால் பற்றிச்சொல்லா விடுதலுந் தோல்வற்றிச்
சாயினுஞ் சான்றாண்மை குன்றாமை யிம்மூன்றும்
தூஉய மென்பார் தொழில். 4

தன்னச்சிச் சென்றாரை யெள்ளா வொருவனும்
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்
என்று மழுக்கா றிகந்தானு மிம்மூவர்
நின்ற புகழுடையார். 5

கோலஞ்சி வாழுங் குடியுங் குடிதழீஇ
ஆலம்வீழ் போலு மமைச்சனும்—வேலின்
கடைமணிபோற் றிண்ணியான் காப்புமிம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல். 6

முந்நீர்த் திரையி னெழுந்தியங்கா மேதையும்
நுண்ணூற் பெருங்கேள்வி நூற்கரை கண்டானும்
மைந்நீர்மை யின்றி மயலறுப்பா னிம்மூவர்
மெய்ந்நீர்மை மேனிற் பவர். 7

தன்னை வியந்து தருக்கலுந் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையு மிம்மூன்றும்
செல்வ முடைக்கும் படை. 8

வைத்தனை யின்சொல்லாக் கொள்வானு நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானு—மூறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானு மிம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார். 9

கண்ணுக் கணிகலங் கண்ணோட்டங் காமுற்ற
பெண்ணுக் கணிகல நாணுடைமை—நண்ணும்
மறுமைக் கணிகலங் கல்வியிம் மூன்றும்
குறியுடையார் கண்ணே யுள. 10

கிளைஞர்க் குதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கட் போற்றா னுழவும்—இளையனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையு மிம்மூன்றும்
உள்ளன போலக் கெடும். 11

நன்றிப் பயன்றூக்கா நாணிலியுஞ் சான்றோர்முன்
மன்றிற் கொடும்பா டுரைப்பானும்—நன்றின்றி
வைத்த தடைக்கலங் கொள்வானு மிம்மூவர்
எச்ச மிழந்துவாழ் வார். 12

நோவஞ்சா தாரோடு நட்பும் விருந்தஞ்சும்
ஈர்வளையை யில்லத் திருத்தலும்—சீர்பயவாத்
தன்மை யிலாள ரயலிருப்பு மிம்மூன்றும்
நன்மை பயத்த லில. 13

இல்லார்க்கொன் றீயமுடைமையு மிவ்வுலகில்
நில்லாமை யுள்ளுநெறிப்பாடு மெவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத தூய்மையு மிம்மூன்றும்
நன்றறியு மாந்தர்க்குள. 14

காவோ டறக்குளந் தொட்டானு நாவினால்
வேதங் கரைகண்ட பார்ப்பானும்—தீதிகந்
தொல்வதுபாத் துண்ணு மொருவனு மிம்மூவர்
செல்வ ரெனப்படுவார். 15

நிறைநெஞ் சுடையானை நல்குர வஞ்சும்
அறனை நினைப்பானை யல்பொரு ளஞ்சும்
மறவனை யெவ்வுயிரு மஞ்சுமிம் மூன்றும்
திறவதிற் தீர்ந்த பொருள். 16

வாய்நன் கமையாக் குளனும் வயிறாரத்
தாய்முலை யுண்ணாக் குழவியும்—சேய்மரபின்
கல்விமாண் பில்லாத மாந்தரு மிம்மூவர்
நல்குரவு சேரப்பட் டார். 17

ஈதற்குச் செய்க பொருளை யறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை—யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லையிம் மூன்றும்
இருளுலகஞ் சேராத வாறு. 18

கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன
செய்வகை செய்வான் றவசி கொடிதோரீஇ
நல்லவை செய்வா னரச னிவர்மூவர்
பெய்யெனப் பெய்யு மழை. 19

ஐங்குரவ ராணை மறுத்தலு மார்வுற்ற
எஞ்சாத நட்பினுட் பொய்வழக்கும்—நெஞ்சமர்ந்த
கற்புடை யாளைத் துறத்தலு மிம்மூன்றும்
நற்புடையி லாளர் தொழில். 20

# நான்மணிக்கடிகை.

கள்ளி வயிற்றி னகில்பிறக்கு மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி. 1

கற்றார்முற் றோன்றா கழிவிரக்கங் காதலித்தொன்
றுற்றார்முற் றோன்றா வுறாமுதல்—தெற்றென
அல்ல புரிந்தார்க் கறந்தோன்றா வெல்லாம்
வெகுண்டார்முற் றோன்றாக் கெடும். 2

கன்றாமை வேண்டுங் கடிய பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல்வேண்டும்—என்றும்
விடல்வேண்டுந் தங்கண் வெகுளி யடல்வேண்டும்
ஆக்கஞ் சிதைக்கும் வினை. 3

பறைநன்று பண்ணமையா யாழி னிறைநின்ற
பெண்ணன்று பீடிலா மாந்தரின்—பண்ணழிந்
தார்தலி னன்று பசித்தல் பசைந்தாரில்
தீர்தலிற் றீப்புகுத னன்று. 4

இன்னாமை வேண்டி னிரவெழுக இந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல். 5

அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம். 6

கோனோக்கி வாழுங் குடியெல்லாந் தாய்முலையின்
பானோக்கி வாழுங் குழவிகள்—வானத்
துளிநோக்கி வாழு முலக முலகின்
விளிநோக்கி யின்புறூஉங் கூற்று. 7

திருவிற் றிறலுடைய தில்லை ஒருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை—எற்றுள்ளும்
இன்மையி னின்னாத தில்லையிலனென்னும்
வன்மையின் வன்பாட்ட தில். 8

கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தலெஞ் ஞான்றும்
இரப்பவர்க்குச் செல்சாரொன் றீவோர்-பரப்பமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை யூனுண்டல்
செய்யாமை செல்சா ருயிர்க்கு. 9

பிறக்குங்காற் பேரெனவும் பேரா இறக்குங்கால்
நில்லென்வு நில்லா வுயிரனைத்தும்—நல்லாள்
உடன்படிற் றானே பெருகுங் கெடும்பொழுதில்
கண்ணனடவுங் காணாக் கெடும். 10

போரின்றி வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த
வேரின்றி வாடு மரமெல்லாம்—நீர்பாய்
மடையின்றி நீணெய்தல் வாடும் படையின்றி
மன்னர்சீர் வாடி விடும். 11

நாற்ற முரைக்கும் மலருண்மை கூறிய
மாற்ற முரைக்கும் வினைநலம் தூக்கின்
அகம்பொதிந்த தீமை மனமுரைக்கு முன்னம்
முகம்போல முன்னுரைப்ப தில். 12

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை-மழையும்
தவமிலா ரில்வழி யில்லை - தவமும்
அரசிலா ரில்வழி யில்லை - யரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில். 13

யாறு ளடங்குங் குளமுள வீறுசால்
மன்னர் விழையுங் குடியுள தொன்மரபின்
வேத முறுவன பாட்டுள வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள. 14

கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கல்வியின்
நுண்ணிய வாய பொருளில்லை கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை யீன்றாளின்
என்ன கடவுளு மில். 15

என்று முளவாகு நாளு மிருசுடரும்
என்றும் பிணியுந் தொழிலொக்கும்—என்றும்
கொடுப்பாருங் கொள்வாரு மன்னர் பிறப்பாரும்
சாவாரு மென்று முளர். 16

பழியின்மை மக்களாற் காண்க வொருவன்
கெழுவின்மை கேட்டா லறிக பொருளின்
நிகழ்ச்சியா னாக்க மறிக புகழ்ச்சியால்
போற்றாதார் போற்றப் படும். 17

ஊனுண் டுழுவை நிறம்பெறூஉ நீர்நிலத்துப்
புல்லின் னின்புறூஉங் காலேயம்—நெல்லின்
அரிசியா னின்புறூஉங் கீழெல்லாந் தத்தம்
வரிசையா னின்புறூஉ மேல். 18

கைத்திலர் நல்லராங் கைத்துண்டாக் காவாரின்
வைத்தாரி னல்லர் வறியவர்—பைத்தெழுந்து
வைதாரி னல்லர் பொறுப்பவர் செய்தாரின்
நல்லர் சிதையா தவர். 19

மகனுரைக்குந் தந்தை நலத்தை யொருவன்
முகனுரைக்கு முண்ணின்ற வேட்கை—அகனீர்ப்
பிலத்தியல்பு புக்கா னுரைக்கு நிலத்தியல்பு
வான முரைத்து விடும். 20

தேவ ரனையர் புலவருந் - தேவர்
தமரனைய ரோரூ ருறைவார்—தமருள்ளும்
பெற்றன்னர் பேணி வழிபடுவார் - கற்றன்னர்
கற்றாரைக் காத லவர். 21

சாவாத தில்லை பிறந்த வுயிரெல்லாம்
தாவாத தில்லை வலிகளும்—மூவா
திளமை யிசைந்தாரு மில்லை-வளமையில்
கேடின்றிச் சென்றாரு மில். 22

கொடுப்பி னசனங் கொடுக்க - விடுப்பின்
உயிரிடை யீட்ட விடுக்க—எடுப்பின்
இளையுட் கழிந்தா ரெடுக்க கெடுப்பின்
வெகுளி கெடுத்து விட. 23

நல்லார்க்குந் தம்மூரொன் றாரில்லை நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றாரில்லை—அல்லார்க்
கடைகட்குந் தம்மூரென் றாரில்லை தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரு மூர். 24

ல்லா வொருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்றம்
மெல்லிய வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்
ல்லவை செய்வார்க் கறங்கூற்றங் கூற்றமே
இல்லிருந்து தீங்கொழுகு வாள். 25

ள்ளாமை வேண்டுங் கடியவருதலால்
ள்ளாமை வேண்டுந் தகுதி யுடையன
ள்ளாமை வேண்டுஞ் சிறியாரோ டியார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை. 46

ளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
ளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
ளாருநரில் போழ்திற் சினங்குற்றம் குற்றம்
மரல்லா ரில்லகத் தூண். 27

ல்லா விடத்துங் கொண்டீது மக்களைக்
ல்லா வளர விடலீது—நல்லார்
லந்தீது நாணுற்றி நிற்பிற குலந்தீது
காள்கை யழிந்தக் கடை. 28

ாசு படினு மணிதன்சீர் குன்றாவாம்
சிக்கொளினு மிரும்பின்கண்—மாசோடும்
ாசத்து விட்டு விளக்கினுங் கீழ்தன்னை
ாசுடைமை காட்டி விடும். 29

ருவ னறிவானு மெல்லாம்யா தொன்றும்
ருவ னறியா தவனும்—ஒருவன்
ணனடங்கக் குற்ற முளானு மொருவன்
ணனடங்கக் கற்றானு மில். 30

# சிறுபஞ்சமூலம்.

பொருளுடையான் கண்ணதே போக மறனும்
அருளுடையான் கண்ணதே யாகும்—அருளுடையான்
செய்யான் பழிபாவஞ் சேரான் புறமொழியும்
உய்யான் பிறர்செவிக் குய்த்து. 1

படைதனக் கியானை வனப்பாகு மெண்ணின் [லாண்மை
இடைதனக்கு நுண்மை வனப்பாம்—நடைதனக்குச்செல்
கோடா மொழிவனப்புக் கோற்கதுவேல் சேவகற்கும்
வாடாத வன்கண் வனப்பு. 2

கண்வனப்புக் கண்ணோட்டங் கால்வனப்புச்
எண்வனப்பித் துணையா மென்றுரைத்தல்—பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல் கிளர்வேந்தன் றன்னாடு
வாட்டானன் றென்றல் வனப்பு. 3

சிலம்பிக்குத் தன்சினை கூற்றநீள் கோடு
விலங்கிற்குக் கூற்ற மயிர்தான்—பலன்படா
மாவிற்குக் கூற்றமா ஞெண்டிற்குத் தன்பார்ப்பு
நாவிற்கு நன்றல் வசை. 4

நாணிலான் சால்பு நடையிலா னன்னோன்பும்
ஊணிலான் செய்யு முதாரதையும்—ஏணிலான்
சேவகமுஞ் செந்தமிழ் தேற்றான் கவிசெயலும்
நாவகமே நாடி னகை. 5

பெருங்குணத்தார் சேர்மின் பிறன்பொருள் வவ்வன்மின்
கருங்குணத்தார் கேண்மை கழிமின்—ஒருங்குணர்ந்து
தீச்சொல்லே காமின் வருங்காலன் றிண்ணிதே
வாய்ச்சொல்லே யன்று வழக்கு. 6

மயிர்வனப்புங் கண்கவரு மார்பின் வனப்பும்
உகிர்வனப்புங் காதின் வனப்பும்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு. 7

வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலும்
நீர்சான் றுயரவே நெல்லுயரும்—சீர்சான்ற
தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயர்தல்
ஓவா துரைக்கு முலகு. 8

அழியாமை யெத்தவமுஞ் சார்ந்தாரை யாக்கல்
பழியாமை பாத்தல்யார் மாட்டும்—ஒழியாமை
கன்றுசா வப்பால் கறவாமை செய்யாக
மன்றுசார் வாக மனை. 9

பொச்சாப்புக் கேடு பொருட்செருக்குத் தான்கேடு
முற்றுமை கேடு முரண்கேடு—தெற்ற
தொழின்மகன் றன்னெ டொரீஇயி னென்றும்
உழுமகற்குக் கேடென் றுரை. 10

பொன்பெறுங் கற்றான் பொருள்பெறு நற்கவி
என்பெறும் வாதியம்பெறும—முன்பெறக்
கல்லார்கற் றாரினத் தல்லார் பெறுபவே
நல்லா ரினத்து நகை. 11

நல்ல வெளிப்படுத்துத் தீய மறைத்தொழிந்
தொல்லை யுயிர்க்கூற்றுக் கோலாகி—ஒல்லுமேல்
மாயம் பிறர்பொருட்கண் மாற்றி மனத்தான்
ஆயி னொழித லறிவு. 12

நன்புலத்துள் வையடக்கி நாளுநா ளோர்போக்கிப்
புன்புலத்தைச் செய்தருப் போக்கியபின்—இன்புலத்த
பண்கலப்பை யென்றிவை பாரப்படுப் பானுழவோன்
நுண்கலப்பை நாலோது வார். 13

நீரற நன்று நிழனன்று தன்னில்லுள்
பாரற நன்றுபாத் துண்பதேனல்—நேர்பெற
நன்று தளிசாலை நாட்டிற் பெரும்போகம்
ஒன்றுமாஞ் சால வுடன். 14

குலந்தொட்டுக் காடு பதித்து வழிசீத்
துலந்தொட் டுழுவய லாக்கி—வளந்தொட்ட
பாகு படுகிணற்றோ டென்றிவை பாற்படுத்தான்
ஏகுஞ் சுவர்க்க மினிது. 15

தான்பிறந்த வின்னினைந்து தன்னைக் கடைப்பிடித்துத்
தான்பிற ராற்கருதற் பாடுணர்ந்து—தான்பிறரால்
சாகவெனவாழான் சான்றோரா லெந்நாளும்
ஆகவென வாழ்த னன்று. 16

புண்பட்டார் போற்றுவா ரில்லாதார் போகுயிர்கள்
கண்கெட்டார் காலிரண்டு மில்லாதார்—கண்கடைப்பட்
டாழ்ந்து நெகிழ்ந்தவர்க் கீந்தார்கடைபோக
வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து. 17

கழிந்தவை தானிரங்கான் கைவாரா நச்சான்
இழிந்தவை யின்புறானில்லார்—மொழிந்தவை
மென்மொழியா லுண்ணெகிழ்ந் தீவானேல் விண்ணோரால்
இன்மொழியா லேத்தப்படும். 18

தோற்சன்று காட்டிக் கறவார் கறந்தபால்
பாற்பட்டா ருண்ணார் பழிபாவம்—பாற்பட்டார்
ஏற்றயரா ரின்புற்று வாழ்வன வீடழியக்
கூற்றயரச் செய்யார் கொணர்ந்து. 19

கற்புடைய பெண்ணமிழ்து கற்றடங்கினனமிழ்து
நற்புடைய நாடமிழ்து நாட்டுக்கு—நற்புடைய
மேகமே சேர்கொடி வேந்தமிழ்து சேவகனும்
ஆகவே செய்யி னமிழ்து. 20

பிழைத்த பொறுத்தல் பெருமை சிறுமை
இழைத்ததீங் கெண்ணி யிருத்தல்—பிழைத்தல்
பகைகெட வாழ்வது பலபொருளாற்பல்லார்
நகைகெட வாழ்வது நன்று. 21

1563

# தாயுமானவர்பாடல்

அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமா
யானந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்டகோடி யெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாம னின்றதெது சமயகோடிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வ மென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ளதெதுமேல்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதி யஞ்சலிசெய்குவாம்.